## QueAns_NEET-2021-Code-P3

**1.** A body is executing simple harmonic motion with frequency '$n$', the frequency of its potential energy is

(1) $4n$ (2) $n$
(3) $2n$ (4) $3n$

'$n$' எனும் அதிர்வெண் கொண்ட எளிய சீரிசை இயக்கத்தினை ஒரு பொருள் மேற்கொள்கிறது. அதன் நிலையாற்றலுக்கான அதிர்வெண் என்பது:

(1) $4n$ (2) $n$
(3) $2n$ (4) $3n$

Answer (3)

**2.** Polar molecules are the molecules

(1) Having a permanent electric dipole moment.
(2) Having zero dipole moment.
(3) Acquire a dipole moment only in the presence of electric field due to displacement of charges.
(4) Acquire a dipole moment only when magnetic field is absent.

முனையமுறு மூலக்கூறுகள் எனும் மூலக் கூறுகள்:

(1) நிலையானதொரு மின் இருமுனை திருப்புத்திறனைக் கொண்டவை.
(2) சுழி மின் இருமுனை திருப்புத்திறன் கொண்டவை.
(3) ஒரு மின்புலம் அமைப் பெறும்போது மட்டும், மின்னூட்டங்களின் இடப்பெயர்ச்சியால் ஒரு மின் இருமுனை திருப்புத் திறனைப் பெறக்கூடியவை.
(4) ஒரு காந்தப்புலம் அமைப்ப பெறாத போது மட்டும், ஒரு மின் இருமுனை திருப்புத் திறனைப் பெறக்கூடியவை.

Answer (1)

**3.** **Column-I** gives certain physical terms associated with flow of current through a metallic conductor.

**Column-II** gives some mathematical relations involving electrical quantities. Match **Column-I** and **Column-II** with appropriate relations.

| Column – I | Column – II |
|---|---|
| (A) Drift Velocity | (P) $\frac{m}{ne^2\rho}$ |
| (B) Electrical Resistivity | (Q) $nev_d$ |
| (C) Relaxation Period | (R) $\frac{eE}{m}\tau$ |
| (D) Current Density | (S) $\frac{E}{J}$ |

(1) (A) – (R), (B) – (Q), (C) – (S), (D) – (P)
(2) (A) – (R), (B) – (S), (C) – (P), (D) – (Q)

(3) (A) – (R), (B) – (S), (C) – (Q), (D) – (P)
(4) (A) – (R), (B) – (P), (C) – (S), (D) – (Q)

நிரல் – I என்பது ஓர் உலோகக் கடத்தி வழியாகப் பாயும் மின்னோட்டத்தோடு தொடர்புடைய குறிப்பிட்ட இயற்பியல் பதங்களைத் தருகிறது. நிரல் – II என்பது, மின்னியல் அளவைகளை உள்ளடக்கிய சில கணக்கியல் தொடர்புகளாகும். நிரல் – I மற்றும் நிரல் – II ஆகியவற்றினை உரிய தொடர்புகளால் பொருத்துக.

| நிரல் – I | நிரல் – II |
|---|---|
| (A) நகர்வு திசைவேகம் | (P) $\frac{m}{ne^2\rho}$ |
| (B) மின் தடையெண் | (Q) $nev_d$ |
| (C) ஓய்வுக் காலம் | (R) $\frac{eE}{m}\tau$ |
| (D) மின்னோட்ட அடர்த்தி | (S) $\frac{E}{J}$ |

(1) (A) – (R), (B) – (Q), (C) – (S), (D) – (P)
(2) (A) – (R), (B) – (S), (C) – (P), (D) – (Q)
(3) (A) – (R), (B) – (S), (C) – (Q), (D) – (P)
(4) (A) – (R), (B) – (P), (C) – (S), (D) – (Q)

Answer (2)

**4.** Two charged spherical conductors of radius $R_1$ and $R_2$ and connected by a wire. Then the ratio of surface charge densities of the spheres $(\sigma_1/\sigma_2)$ is

(1) $\frac{R_1^2}{R_2^2}$  (2) $\frac{R_1}{R_2}$
(3) $\frac{R_2}{R_1}$  (4) $\sqrt{\left(\frac{R_1}{R_2}\right)}$

$R_1$ மற்றும் $R_2$ ஆரம் கொண்ட இரு மின்னூட்டப்பட்ட கோள வடிவ கடத்திகள், கம்பியொன்றினால் இணைக்கப்பட்டு உள்ளன. $(\sigma_1/\sigma_2)$ எனும் கோளங்களுக்கான மின்னூட்டப் பரப்பு அடர்த்திகளுக்கான விகிதம் என்பது:

(1) $\frac{R_1^2}{R_2^2}$  (2) $\frac{R_1}{R_2}$
(3) $\frac{R_2}{R_1}$  (4) $\sqrt{\left(\frac{R_1}{R_2}\right)}$

Answer (3)

**5.** A parallel plate capacitor has a uniform electric field '$\vec{E}$' in the space between the plates. If the distance between the plates is '$d$' and the area of each plate is '$A$', the energy stored in the capacitor is ($\varepsilon_0$ = permittivity of free space)

(1) $\frac{E^2Ad}{\varepsilon_0}$  (2) $\frac{1}{2}\varepsilon_0 E^2$
(3) $\varepsilon_0 EAd$  (4) $\frac{1}{2}\varepsilon_0 E^2 Ad$

ஓர் இணைத்தட்டு மின்தேக்கி, தனது தட்டுகளுக்கு இடைப்பட்ட வெளியில் சீரானதொரு '$\vec{E}$' மின்புலத்தினைப் பெற்றுள்ளது. தட்டுகளுக்கு இடையிலான தொலைவு, '$d$' மற்றும் ஒவ்வொரு தட்டினது பரப்பு, '$A$', எனில், மின்தேக்கியில் தேக்கி வைக்கப்படும் ஆற்றலானது, ($\varepsilon_0$ = கட்டற்ற வெளியினது மின் அனுமதிதிறன்)

(1) $\frac{E^2Ad}{\varepsilon_0}$
(2) $\frac{1}{2}\varepsilon_0E^2$
(3) $\varepsilon_0EAd$
(4) $\frac{1}{2}\varepsilon_0E^2Ad$

Answer (4)

**6.** An infinitely long straight conductor carries a current of 5 A as shown. An electron is moving with a speed of $10^5$ m/s parallel to the conductor. The perpendicular distance between the electron and the conductor is 20 cm at an instant. Calculate the magnitude of the force experienced by the electron at that instant.

Electron $v = 10^5$ m/s




(1) $8 \times 10^{-20}$ N
(2) $4 \times 10^{-20}$ N
(3) $8\pi \times 10^{-20}$ N
(4) $4\pi \times 10^{-20}$ N

ஈறில்லா நீளம் கொண்ட நேர் கடத்தியொன்று, படத்தில் காட்டியுள்ளவாறு, 5A மின்னோட்டத்தினை தாங்குகிறது. ஓர் எலெக்டிரான் $10^5$ மீ/வி என்ற வேகத்தில் கடத்திக்கு இணையாக நகர்கிறது. ஒரு கண நேரத்தில், எலெக்டிரானுக்கும் கடத்திக்கும் இடைப்பட்ட செங்குத்து தூரம் என்பது, 20 செ.மீ. ஆகும். அக்கணநேரத்தில், எலெக்டிரானால் உணரப்படும் விசையினது எண் மதிப்பினைக் கணக்கிடுக.

எலெக்ரான் $v = 10^5$ மீ /வி




(1) $8 \times 10^{-20}$ நி
(2) $4 \times 10^{-20}$ நி
(3) $8\pi \times 10^{-20}$ நி
(4) $4\pi \times 10^{-20}$ நி

Answer (1)

**7.** If E and G respectively denote energy and gravitational constant, then $\frac{E}{G}$ has the dimensions of

(1) $[M^2] [L^{-2}] [T^{-1}]$ (2) $[M^2] [L^{-1}] [T^0]$
(3) $[M] [L^{-1}] [T^{-1}]$ (4) $[M] [L^0] [T^0]$

E மற்றும் G ஆகியன ஆற்றல் மற்றும் புவியீர்ப்பு மாறிலி ஆகியவற்றை முறையாக குறித்தால், $\frac{E}{G}$ என்பது பெற்றிருக்கும் பரிமாணங்களாவன:

(1) $[M^2] [L^{-2}] [T^{-1}]$ (2) $[M^2] [L^{-1}] [T^0]$
(3) $[M] [L^{-1}] [T^{-1}]$ (4) $[M] [L^0] [T^0]$

Answer (2)

**8.** A lens of large focal length and large aperture is best suited as an objective of an astronomical telescope since

(1) A large aperture contributes to the quality and visibility of the images.
(2) A large area of the objective ensures better light gathering power.
(3) A large aperture provides a better resolution.
(4) All of the above

பெரிய ஒளித்திறப்பு மற்றும் நெடிய குவிதூரம் கொண்டதொரு வில்லை ஒரு வானியல் தொலைநோக்கியின் பொருளருகு வில்லையாக மிகச் சரியாக பொருந்தும் என்பதற்கான காரணமாக இருப்பது:

(1) பெரியதொரு ஒளித்திறப்பு என்பது, பிம்பங்களது தரம் மற்றும் புலப்படுதிறன் ஆகியவற்றிற்கு பங்களிக்கும்.
(2) அதிக பரப்பு கொண்ட பொருளருகு வில்லை என்பது, நல்லதொரு ஒளிச் சேர்க்கைக்கான திறனை உறுதி செய்யும்.
(3) பெரியதொரு ஒளித்திறப்பு நல்லதொரு பகுதிறன் அளிக்கும்.
(4) மேற்கூறிய அனைத்தும்.

Answer (4)

**9.** Match **Column – I** and **Column – II** and choose the correct match from the given choices.

| **Column – I** | **Column – II** |
|---|---|
| (A) Root mean square speed of gas molecules | (P) $\frac{1}{3} nmv^{-2}$ |
| (B) Pressure exerted by ideal gas | (Q) $\sqrt{\frac{3RT}{M}}$ |
| (C) Average kinetic energy of a molecule | (R) $\frac{5}{2} RT$ |
| (D) Total internal energy of 1 mole of | |

a diatomic gas (S) $\frac{3}{2}k_BT$

(1) (A) – (R), (B) – (Q), (C) – (P), (D) – (S)
(2) (A) – (R), (B) – (P), (C) – (S), (D) – (Q)
(3) (A) – (Q), (B) – (R), (C) – (S), (D) – (P)
(4) (A) – (Q), (B) – (P), (C) – (S), (D) – (R)

நிரல் – I மற்றும் நிரல் – II ஆகியவற்றைப் பொருத்தி, கொடுக்கப்பட்ட தெரிவுகளிலிருந்து, சரியான பொருத்தத்தினை தெரிவு செய்க.

| நிரல் – I | நிரல் – II |
|---|---|
| (A) வாயு மூலக்கூறுகளது இருமடி சராசரியின் வர்க்க மூலம் | (P) $\frac{1}{3}nmv^{-2}$ |
| (B) நல்லியல்பு வாயுவினால் செலுத்தப்படும் அழுத்தம் | (Q) $\sqrt{\frac{3RT}{M}}$ |
| (C) ஒரு மூலக்கூறினது சராசரி இயக்க ஆற்றல் | (R) $\frac{5}{2}RT$ |
| (D) ஓர் ஈரணு வாயுவின் மோலுக்கான மொத்த உள்ளார்ந்த ஆற்றல் | (S) $\frac{3}{2}k_BT$ |

(1) (A) – (R), (B) – (Q), (C) – (P), (D) – (S)
(2) (A) – (R), (B) – (P), (C) – (S), (D) – (Q)
(3) (A) – (Q), (B) – (R), (C) – (S), (D) – (P)
(4) (A) – (Q), (B) – (P), (C) – (S), (D) – (R)

Answer (4)

**10.** Consider the following **statements (A)** and **(B)** and identify the correct answer.

(A): A zener diode is connected in reverse bias, when used as a voltage regulator.
(B): The potential barrier of *p-n* junction lies between 0.1 V to 0.3 V.

(1) (A) is incorrect but (B) is correct.
(2) (A) and (B) both are correct.
(3) (A) and (B) both are incorrect.
(4) (A) is correct and (B) is incorrect.

(A) மற்றும் (B) ஆகிய பின்வரும் கூற்றுகளைக் கருதி, சரியான விடையினை கண்டறிக.

(A): மின்னழுத்த ஒழுங்கிசைவு இயந்திரம் இயக்கப் படும்போது ஒரு ஜீனர் டயோடு பின்னோர்க்குச் சார்பில் இணைக்கப்படும்.
(B): p-n சந்தியினது மின்னழுத்த அரண் 0.1 V லிருந்து 0.3 V க்கு இடையில் அமையும்.

(1) (A) என்பது சரியற்றது ஆனால் (B) என்பது சரியானது.
(2) (A) மற்றும் (B) ஆகிய இரண்டும் சரியானவை.
(3) (A) மற்றும் (B) ஆகிய இரண்டும் சரியற்றவை.

(4) (A) என்பது சரியானது மற்றும் (B) என்பது சரியற்றது.

Answer (4)

**11.** A dipole is placed in an electric field as shown. In which direction will it move?

(1) Towards the right as its potential energy will increase.

(2) Towards the left as its potential energy will increase.

(3) Towards the right as its potential energy will decrease.

(4) Towards the left as its potential energy will decrease.




படத்தில் காட்டப்பட்டவாறு ஒரு மின் இருமுனை, மின்புலம் ஒன்றில் வைக்கப்படுகிறது. அது எந்த திசையில் நகரும்?

(1) அதன் நிலையாற்றல் அதிகரிக்கும் போது, வலப்பக்கமாக நகரும்.

(2) அதன் நிலையாற்றல் அதிகரிக்கும் போது, இடப்பக்கமாக நகரும்.

(3) அதன் நிலையாற்றல் குறையும் போது, வலப்பக்கமாக நகரும்.

(4) அதன் நிலையாற்றல் குறையும் போது, இடப்பக்கமாக நகரும்.

Answer (3)

**12.** A convex lens '*A*' of focal length 20 cm and a concave lens '*B*' of focal length 5 cm are kept along the same axis with a distance '*d*' between them. If a parallel beam of light falling on '*A*' leaves '*B*' as a parallel beam, then the distance '*d*' in cm will be

(1) 30 (2) 25

(3) 15 (4) 50

20 செ.மீ. குவிதூரம் கொண்ட '*A*' எனும் ஒரு குவி வில்லை மற்றும் 5 செ.மீ. குவிதூரம் கொண்ட 'B' எனும் ஒரு குழிவில்லை ஆகியன 'd' எனும் இடைதூரத்தில் சம அச்சு திசையில் அமைக்கப் பட்டுள்ளன. 'A' மீது விழும் இணையானதொரு ஒளிக்கற்றறை 'B' வழியே இணைக்கற்றையாக வெளியேறுகிறது. எனில் 'd' எனும் தூரம் செ.மீட்டரில்:

(1) 30

(2) 25

(3) 15

(4) 50

Answer (3)

**13.** The escape velocity from the Earth's surface is $v$. The escape velocity from the surface of another planet having a radius, four times that of Earth and same mass density is

(1) $4v$ (2) $v$

(3) $2v$ (4) $3v$

புவிப்பரப்பிலிருந்து, விடுபடு திசைவேகம் என்பது, $v$ ஆகும். பூமியினது ஆரத்தின் நான்கு மடங்கு ஆரமும் சமமான நிறை அடர்த்தியும் கொண்ட மற்றொரு கோளது பரப்பிலிருந்து, விடுபடு திசைவேகமானது:

(1) $4v$ (2) $v$

(3) $2v$ (4) $3v$

Answer (1)

**14.** A radioactive nucleus ${}^{A}_{Z}X$ undergoes spontaneous decay in the sequence ${}^{A}_{Z}X \rightarrow_{z-1} B \rightarrow_{z-3} C \rightarrow_{z-2} D$, where Z is the atomic number of element $X$. The possible decay particles in the sequence are

(1) $\beta^-, \alpha, \beta^+$ (2) $\alpha, \beta^-, \beta^+$

(3) $\alpha, \beta^+, \beta^-$ (4) $\beta^+, \alpha, \beta^-$

${}^{A}_{Z}X$ எனும் ஒரு கதிரியக்க அணுக்கரு அடையக்கூடிய தன்னியல்பு சிதைவின் வரிசை முறை, ${}^{A}_{Z}X \rightarrow_{z-1} B \rightarrow_{z-3} C \rightarrow_{z-2} D$, இங்கு Z என்பது X தனிமத்தின் அணு எண் ஆகும். இந்த வரிசை முறையில் நிகழக்கூடிய சிதைவு துகள்கள் என்பன முறையே:

1) $\beta^-, \alpha, \beta^+$ (2) $\alpha, \beta^-, \beta^+$

(3) $\alpha, \beta^+, \beta^-$ (4) $\beta^+, \alpha, \beta^-$

Answer (4)

**15.** A screw gauge gives the following readings when used to measure the diameter of a wire

Main scale reading: 0 mm

Circular scale reading: 52 divisions

Given that 1 mm on main scale corresponds to 100 divisions on the circular scale. The diameter of the wire from the above data is

(1) 0.052 cm (2) 0.52 cm

(3) 0.026 cm (4) 0.26 cm

ஒரு மின்கம்பியின் விட்டத்தினை அளவிட, ஒரு திருகு அளவி பயன்படுத்தப்படும் போது, பின்வரும் அளவீடுகளைத் தருகிறது.

முதன்மை அளவுகோல் அளவீடு: 0 மி.மீ.

வட்ட அளவுகோல் அளவீடு: 52 பிரிவுகள்

முதன்மை அளவுகோலின் 1 மி.மீ. வட்ட அளவுகோலது 100 பிரிவுகளைக் குறிக்கும் எனக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய தரவுகளிலிருந்து, மின்கம்பியின் விட்டம் என்பது:

(1) 0.052 செ.மீ. (2) 0.52 செ.மீ.

(3) 0.026 செ.மீ. (4) 0.26 செ.மீ. Answer (1)

**16.** An inductor of inductance $L$, a capacitor of capacitance $C$ and a resistor of resistance '$R$' are connected in series to an ac source of potential difference '$V$' volts as shown in figure. Potential difference across $L$, $C$ and $R$ is 40 V, 10 V and 40 V, respectively. The amplitude of current flowing through $LCR$ series circuit is $10\sqrt{2}$ A. The impedance of the circuit is

படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, '$V$' எனும் மின்னழுத்த வேறுபாடு கொண்டதொரு ac மூலத்தோடு '$L$' எனும் மின்தூண்டல் எண் கொண்டதொரு மின் தூண்டி '$C$' எனும் மின்தேக்குத்திறன் கொண்டதொரு மின்தேக்கியும் மற்றும் '$R$' எனும் மின்தடை மதிப்பு கொண்டதொரு மின்தடையும் தொடர்சுற்றில் இணைக்கப்பட்டுள்ளது.

$L$, $C$ மற்றும் $R$ க்கு குறுக்கிலான மின்னழுத்த வேறுபாடு 40 வோல்ட், 10 வோல்ட் மற்றும் 40 வோல்ட் என்று முறையாக அமைகிறது. $LCR$ தொடர் மின்சுற்றின் வழியே பாயும் மின்னோட்டத்தின் வீச்சு, $10\sqrt{2}$A ஆம்பியர் ஆகும். மின்சுற்றிலுள்ள மின்மறுப்பு என்பது:




(1) 5 Ω
(2) $4\sqrt{2}$ Ω
(3) $5\sqrt{2}$ Ω
(4) 5 Ω

Answer (1)

**17.** A particle is released from height '$S$' from the surface of the Earth. At a certain height its kinetic energy is three times its potential energy. The height from the surface of earth and the speed of the particle at that instant are respectively

(1) $\frac{S}{4}, \sqrt{\frac{3gS}{2}}$
(2) $\frac{S}{4}, \sqrt{\frac{3gS}{2}}$
(3) $\frac{S}{4}, \sqrt{\frac{3gS}{2}}$
(4) $\frac{S}{2}, \sqrt{\frac{3gS}{2}}$

புவிபரப்பின் '$S$' உயரத்திலிருந்து ஒரு துகள் விடுவிக்கப்படுகிறது. குறிப்பிட்டதொரு உயரத்தில், அதன் இயக்க ஆற்றல், அதன் நிலையாற்றலின் மும்மடங்காகும். அந்த கணத்தில், துகளது உயரம் மற்றும் வேகம் ஆகியவை முறையே:

(1) $\frac{S}{4}, \sqrt{\frac{3gS}{2}}$
(2) $\frac{S}{4}, \sqrt{\frac{3gS}{2}}$
(3) $\frac{S}{4}, \sqrt{\frac{3gS}{2}}$
(4) $\frac{S}{2}, \sqrt{\frac{3gS}{2}}$

Answer (1)

**18.** A small block slides down on a smooth inclined plane, starting from rest at time $t = 0$. Let $S_n$ be the distance travelled by the block in the interval $t = n - 1$ to $t = n$. Then, the ratio $\frac{S_n}{S_{n+1}}$ is

(1) $\frac{2n}{2n-1}$ (2) $\frac{2n-1}{2n}$

(3) $\frac{2n-1}{2n+1}$ (4) $\frac{2n+1}{2n-1}$

$t = 0$ எனும் நேரத்தில், தொடக்கத்தில் ஓய்வு நிலையிலிருந்த ஒரு சிறிய கட்டை, வழவழப்பான சாய்தளத்தில் கீழே சரிகிறது. $t = n - 1$ யிலிருந்து $t = n$ என்ற இடைவெளியில், கட்டையால் பயணிக்கப்படும் தொலைவு, $S_n$ என்க. $\frac{S_n}{S_{n+1}}$ எனும் தகவு என்பது:

(1) $\frac{2n}{2n-1}$ (2) $\frac{2n-1}{2n}$

(3) $\frac{2n-1}{2n+1}$ (4) $\frac{2n+1}{2n-1}$

Answer (3)

**19.** The half-life of a radioactive nuclide is 100 hours. The fraction of original activity that will remain after 150 hours would be

(1) $\frac{2}{3\sqrt{2}}$ (2) $\frac{1}{2}$

(3) $\frac{1}{2\sqrt{2}}$ (4) $\frac{2}{3}$

ஒரு கதிரியக்க அணுக்கருவின் அரை-ஆயுட் காலம் 100 மணி நேரமாக உள்ளது. 150 மணி நேரத்திற்குப் பிறகு அதன் தொடக்கச் செயலாக்கத்தின் பின்னமென்பது:

(1) $\frac{2}{3\sqrt{2}}$ (2) $\frac{1}{2}$

(3) $\frac{1}{2\sqrt{2}}$ (4) $\frac{2}{3}$

Answer (3)

**20.** The equivalent capacitance of the combination shown in the figure is
படத்தில் காட்டப்பட்டுள்ள தொகுப்பினது மின்தேக்குத்திறனது சமன் என்பது:




(1) $\frac{3C}{2}$ (2) 3C

(3) 2C (4) $\frac{C}{2}$

Answer (3)

**21.** The effective resistance of a parallel connection that consists of four wires of equal length, equal area of cross-section and same material is 0.25 Ω. What will be the effective resistance if they are connected in series?

(1) 4 Ω (2) 0.25 Ω (3) 0.5 Ω (4) 1 Ω

சம நீளம், சம குறுக்கு வெட்டுப்பரப்பு மற்றும் ஒரே பொருளாலான நான்கு மின் கம்பிகளைப் பெற்றுள்ளதொரு பக்க இணைப்பினது நிகர் மின்தடை, 0.25 Ω ஆகும். அவை தொடர் சுற்றில் இணைக்கப்பட்டால், அவற்றின் நிகர் மின்தடை என்ன?

(1) 4 Ω (2) 0.25 Ω (3) 0.5 Ω (4) 1 Ω

Answer (1)

**22.** A nucleus with mass number 240 breaks into two fragments each of mass number 120, the binding energy per nucleon of unfragmented nuclei is 7.6 MeV while that of fragments is 8.5 MeV. The total gain in the Binding Energy in the process is

(1) 216 MeV (2) 0.9 MeV
(3) 9.4 MeV (4) 804 MeV

240 நிறை எண் கொண்டதொரு அணுக்கரு, தனித்து 120 நிறை எண் கொண்ட இரு துண்டுகளாக உடைகிறது. பிளவடையாத அணுக்கருக்களின் ஓரலகு நியூக்ளியானது பிணைப்பாற்றல் 7.6 MeV மற்றும் துண்டுகளது மதிப்பு, 8.5 MeV ஆகும். இந்நிகழ்வில் பிணைப்பாற்றலின் மொத்தப் பெருக்கம் என்பது:

(1) 216 MeV (2) 0.9 MeV
(3) 9.4 MeV (4) 804 MeV

Answer (1)

**23.** The electron concentration in an $n$-type semiconductor is the same as hole concentration in a $p$-type semiconductor. An external field (electric) is applied across each of them. Compare the currents in them.

(1) No current will flow in $p$-type, current will only flow in $n$-type
(2) Current in $n$-type = current in $p$-type
(3) Current in $p$-type > current in $n$-type
(4) Current in $n$-type > current in $p$-type.

ஒரு $n$-வகை குறைகடத்தியினது எலெக்டிரான் செறிவு என்பது ஒரு $p$-வகை குறைகடத்தியினது துளை செறிவுக்குச் சமமாக உள்ளது. அவற்றின் ஒவ்வொன்றுக்குக் குறுக்கே, ஒரு புறப்பலம் (மின்) அளிக்கப்படுகிறது. அவற்றில் உள்ள மின்னோட்டங்களை ஒப்பிடுக.

(1) $p$ – வகையில் மின்னோட்டம் பாயாது, $n$- வகையில் மட்டும் மின்னோட்டம் பாயும்.
(2) $n$ – வகையில் உள்ள மின்னோட்டம் = $p$- வகையில் மட்டும் மின்னோட்டம்.
(3) $p$ – வகையில் மின்னோட்டம் > $n$- வகையில் உள்ள மின்னோட்டம்.
(4) $n$ – வகையில் உள்ள மின்னோட்டம் > $p$- வகையில் உள்ள மின்னோட்டம்.

Answer (4)

**24.** The number of photons per second on an average emitted by the source of monochromatic light of wavelength 600 nm, when it delivers the power of $3.3 \times 10^{-3}$ what will be ($h = 6.6 \times 10^{-34}$ Js)

(1) $10^{15}$ (2) $10^{18}$ (3) $10^{17}$ (4) $10^{16}$

600 நா.மீ. அலைநீளம் கொண்ட ஒற்றை நிற ஒளி மூலத்திலிருந்து சராசரியாக ஒரு வினாடியில் உமிழப்படும் ஃபோட்டான் எண்ணிக்கை, அதன் உமிழும் திறன், $3.3 \times 10^{-3}$ வாட் என்றமையும் போது: ($h = 6.6 \times 10^{-34}$ ஜூவி)

(1) $10^{15}$ (2) $10^{18}$ (3) $10^{17}$ (4) $10^{16}$

Answer (4)

**25.** A thick current carrying cable of radius '*R*' carries current '*I*' uniformly distributed across its cross-section. The variation of magnetic field $B(r)$ due to the cable with the distance '*r*' from the axis of the cable is represented by

'*R*' எனும் ஆரம் கொண்டதொரு தடினமான, மின்னோட்டம் தாங்கிய கம்பிவடம் (கேபிள்) தனது குறுக்கு வெட்டுக்குக் குறுக்கே சீராக பரவலடைந்த 'I' எனும் மின்னோட்டத்தினை தாங்குகிறது. கம்பியின் அச்சிலிருந்து '*r*' தொலைவில், கம்பி வடத்தினால் (கேபிளினால்) ஏற்படும் காந்தப்புல மாற்றம் $B(r)$ யினை குறிக்கப்படுவதென்பது:

(1)



(2)



(3)



(4)



Answer (4)

**26.** The velocity of a small ball of mass *M* and density *d*, when dropped in a container filled with glycerine becomes constant after some time. If the density of glycerine is $\frac{d}{2}$, then the viscous force acting on the ball will be

(1) $2Mg$ (2) $\frac{Mg}{2}$

(3) $Mg$ (4) $\frac{3}{2}Mg$

M நிறை மற்றும் d அடர்த்தி கொண்டதொரு சிறிய பந்தினை, கிளிசரினினால் நிரப்பப்பட்ட கொள்கலத்தில் விழச் செய்யும் பொழுது, சிறிது நேரத்தில் அதன் திசைவேகம் மாறாது அமைகிறது. கிளிசரினின் அடர்த்தி $\frac{d}{2}$ எனில், பந்தின் மீது செயல்படும் பாகியல் விசை என்பது:

(1) $2Mg$
(2) $\frac{Mg}{2}$
(3) $Mg$
(4) $\frac{3}{2}Mg$

Answer (2)

**27.** Find the value of the angle of emergence from the prism. Refractive index of the glass is $\sqrt{3}$.
முப்பட்டகத்திலிருந்து வெளிப்படு கோணத்தினது மதிப்பினைக் கண்டறிக. கண்ணாடியது ஒளிவிலகல் எண் என்பது $\sqrt{3}$ ஆகும்.




(1) 90°
(2) 60°
(3) 30°
(4) 45°

Answer (2)

**28.** A capacitor of capacitance 'C', is connected across an ac source of voltage 'V', given by
$V = V_0 \sin\omega t$
The displacement current between the plates of the capacitor, would then be given by

(1) $I_d = V_0\omega C \sin\omega t$
(2) $I_d = V_0\omega C \cos\omega t$
(3) $I_d = \frac{V_0}{\omega C}\cos\omega t$
(4) $I_d = \frac{V_0}{\omega C}\sin\omega t$

'V' மின்னழுத்தம் கொண்டதொரு ac மூலத்திற்கு குறுக்கே 'C' மின்தேக்குதிறன் கொண்டதொரு மின்தேக்கி இணைக்கப்பட்டுள்ளது. இங்கு $V = V_0 \sin\omega t$.

(1) $I_d = V_0\omega C \sin\omega t$
(2) $I_d = V_0\omega C \cos\omega t$
(3) $I_d = \frac{V_0}{\omega C}\cos\omega t$
(4) $I_d = \frac{V_0}{\omega C}\sin\omega t$

Answer (2)

**29.** If force $[F]$, acceleration $[A]$ and time $[T]$ are chosen as the fundamental physical quantities. Find the dimensions of energy.

(1) $[F][A^{-1}][T]$ (2) $[F][A][T]$

(3) $[F][A][T^2]$ (4) $[F][A][T^{-1}]$

விசை $[F]$, முடுக்கம் $[A]$ மற்றும் நேரம் $[T]$ ஆகியன அடிப்படை இயற்பியல் அளவீடுகள் எனத் தெரிவு செய்யப்பட்டால், ஆற்றலின் பரிமாணங்களைக் கண்டுபிடி.

(1) $[F][A^{-1}][T]$ (2) $[F][A][T]$

(3) $[F][A][T^2]$ (4) $[F][A][T^{-1}]$

Answer (3)

**30.** In a potentiometer circuit a cell of EMF 1.5 V gives balance point at 36 cm length of wire. If another cell of EMF 2.5 V replaces the first cell, then at what length of the wire, the balance point occurs?

(1) 62 cm (2) 60 cm

(3) 21.6 cm (4) 64 cm

1.5 V மி.இ.வி. கொண்டதொரு கலம், ஒரு மின்னழுத்தமானியின் சுற்றில், கம்பி நீளத்தின் 36 செ.மீட்டரில், சமன் புள்ளியைத் தருகிறது. இந்த முதல் கலத்தினை, 2.5 V. மி.இ.வி. கொண்ட மற்றொரு கலத்தைக் கொண்டு மாற்றி அமைத்தால், அதன் சமன் புள்ளி, கம்பியின் எந்த நீளத்தில் அமையப் பெறும்?

(1) 62 செ.மீ. (2) 60 செ.மீ.

(3) 21.6 செ.மீ. (4) 64 செ.மீ.

Answer (2)

**31.** A spring is stretched by 5 cm by a force 10 N. The time period of the oscillations when a mass of 2 kg is suspended by it is

(1) 0.628 s (2) 0.0628 s

(3) 6.28 s (4) 3.14 s

ஒரு 10 நி விசையினால் ஒரு சுருள்வில் 5 செ.மீ. நீட்சியடைகிறது. அதிலிருந்து 2 கி.கி. நிறையொன்று தொங்கவிடப்படும் போது, அதன் அலைவுகளுக்கான கால நேரம் என்பது:

(1) 0.628 வி (2) 0.0628 வி

(3) 6.28 வி (4) 3.14 வி

Answer (1)

**32.** For a plane electromagnetic wave propagating in $x$-direction, which one of the following combination gives the correct possible directions for electric field ($E$) and magnetic field ($B$) respectively?

(1) $-\hat{j}+\hat{k}, -\hat{j}+\hat{k}$ (2) $\hat{j}+\hat{k}, \hat{j}+\hat{k}$

(3) $-\hat{j}+\hat{k}, -\hat{j}-\hat{k}$ (4) $\hat{j}+\hat{k}, -\hat{j}-\hat{k}$

$x$ – திசையில் பரவும் ஒரு தள மின்காந்த அலைக்கு, பின்வரும் தொகுப்புகளில், மின்புலம் (E) மற்றும் காந்தப்புலம் (B) ஆகியவை முறையே சரியாக இயலக்கூடிய முறையான திசைகளானவை எவை?

(1) $-\hat{j} + \hat{k}, -\hat{j} + \hat{k}$ (2) $\hat{j} + \hat{k}, \hat{j} + \hat{k}$

(3) $-\hat{j} + \hat{k}, -\hat{j} - \hat{k}$ (4) $\hat{j} + \hat{k}, -\hat{j} - \hat{k}$

Answer (3)

**33.** A cup coffee cools from 90°C to 80°C in $t$ minutes, when the room temperature is 20°C. The time taken by a similar cup of coffee to cool from 80°C to 60°C at a room temperature same at 20°C is

(1) $\frac{5}{13}t$ (2) $\frac{13}{10}t$

(3) $\frac{13}{5}t$ (4) $\frac{10}{13}t$

Answer (3)

அறை வெப்பநிலை, 20°C என்றமையும் போது, ஒரு கோப்பைக் காபி, 90°C யிலிருந்து 80°C க்கு $t$ நிமிடத்தில் குளிர்வடைகிறது. அறை வெப்பநிலை, அதே 20°C என்றமையும் போது, ஒத்ததொரு கோப்பைக் காபி 80°C யிலிருந்து 60°C க்கு குளிர்வடைவதற்கான கால அளவு என்பது:

(1) $\frac{5}{13}t$ (2) $\frac{13}{10}t$

(3) $\frac{13}{5}t$ (4) $\frac{10}{13}t$

Answer (1)

**34.** An electromagnetic wave of wavelength ‘$\lambda$’ is incident on a photosensitive surface of negligible work function. If ‘$m$’ mass is of photoelectron emitted from the surface has de-Broglie wavelength $\lambda_d$, then

(1) $\lambda = \left(\frac{2h}{mc}\right)\lambda_d^2$ (2) $\lambda = \left(\frac{2m}{hc}\right)\lambda_d^2$

(3) $\lambda_d = \left(\frac{2mc}{h}\right)\lambda^2$ (4) $\lambda = \left(\frac{2mc}{h}\right)\lambda_d^2$

புறக்கணிக்கத்தக்க வேலைச் சார்பினைப் பெற்றுள்ளதொரு ஒளியுணர்வு பரப்பின் மீது ‘$\lambda$’ அலைநீளம் கொண்டதொரு மின்காந்த அலை விழுகிறது. பரப்பிலிருந்து உமிழப்படும் ஒளி எலக்டிரான், ‘m’ நிறையில் $\lambda_d$ எனும் டீ-ப்ராக்லீ அலை நீளத்தினைப் பெற்றிருக்கிறது எனில்,

(1) $\lambda = \left(\frac{2h}{mc}\right)\lambda_d^2$ (2) $\lambda = \left(\frac{2m}{hc}\right)\lambda_d^2$

(3) $\lambda_d = \left(\frac{2mc}{h}\right)\lambda^2$ (4) $\lambda = \left(\frac{2mc}{h}\right)\lambda_d^2$

Answer (4)

**35.** Water falls from a height of 60 m at the rate of 15 kg/s to operate a turbine. The losses due to frictional force are 10% of the input energy. How much power is generated by the turbine? ($g$ = 10 m/s$^2$)

(1) 7.0 kW (2) 10.2 kW
(3) 8.1 kW (4) 12.3 kW

ஒரு சுழல்சக்கரத்தினை (டர்பைன்) செயலாக்க, நீரானது 15 கிகி/வி என்ற வீதத்தில், 60 மீ. உயரத்திலிருந்து நீர் விழுகிறது. உராய்வு விசையினால் ஏற்படும் இழப்புகளாவன, உள்ளீட்டு ஆற்றலின் 10% ஆகும். அந்த சுழல் சக்கரத்தால் (டர்பைன்) உருவாக்கப்படும் திறனது அளவு யாது? (g = 10 மீ/வி$^2$)

(1) 7.0 kW (2) 10.2 kW
(3) 8.1 kW (4) 12.3 kW

Answer (3)

## SECTION – B

**36.** Twenty seven drops of same size are charged at 200 V each. They combine to form a bigger drop. Calculate the potential of the bigger drop.

(1) 1980 V (2) 660 V
(3) 1320 V (4) 1520 V

சம உருவளவு பெற்றுள்ள இருபத்தேழு துளிகள் ஒவ்வொன்றும் 220 V ற்கு மின்னூட்டப் படுகின்றன. அவை இணைந்து ஒருபெரிய துளியாக உருவாகிறது. பெரிய துளியினது மின்னழுத்தத்தினைக் கணக்கிடு.

(1) 1980 V (2) 660 V
(3) 1320 V (4) 1520 V

Answer (1)

**37.** A point object is placed at a distance of 60 cm from a convex lens of focal length 30 cm. If a plane mirror were put perpendicular to the principal axis of the lens and at a distance of 40 cm from it, the final image would be formed at a distance of

(1) 20 cm from the plane mirror, it would be a virtual image
(2) 20 cm from the lens, it would be a real image
(3) 30 cm from the lens, it would be a real image
(4) 30 cm from the plane mirror, it would be a virtual image




(1) தள ஆடியிலிருந்து 20 செ.மீ. தூரத்தில் அது ஒரு மாய பிம்பமாக அமையும்.
(2) வில்லையிலிருந்து 20 செ.மீ. தூரத்தில் அது ஒரு மெய் பிம்பமாக அமையும்.
(3) வில்லையிலிருந்து 30 செ.மீ. தூரத்தில் அது ஒரு மெய் பிம்பமாக அமையும்.
(4) தள ஆடியிலிருந்து 30 செ.மீ. தூரத்தில் அது ஒரு மாய பிம்பமாக அமையும்.

Answer (1)

**38.** A particle of mass '$m$' is projected with a velocity $v = kV_e$ $(k < 1)$ from the surface of the earth. ($V_e$ = escape velocity)

The maximum height above the surface reached by the particle is

(1) $\frac{Rk^2}{1-k^2}$ (2) $R\left(\frac{k}{1-k}\right)^2$

(3) $R\left(\frac{k}{1+k}\right)^2$ (4) $\frac{R^2k}{1+k}$

புவி மேற்பரப்பிலிருந்து $v = kV_e$ $(k < 1)$ என்ற திசைவேகத்தோடு '$m$' நிறை கொண்டதொரு துகள் எறியப்படுகிறது. ($V_e$ = விடுபடு திசைவேகம்)

மேற்பரப்பிற்கு மேலே, துகள் சென்று சேரும் பெரும உயரம் என்பது:

(1) $\frac{Rk^2}{1-k^2}$ (2) $R\left(\frac{k}{1-k}\right)^2$

(3) $R\left(\frac{k}{1+k}\right)^2$ (4) $\frac{R^2k}{1+k}$

Answer (1)

**39.** In the product

$\vec{F} = q\,(\vec{v} \times \vec{B})$

$= q\vec{v} \times (B\hat{i} + B\hat{j} + B_0\hat{k})$

For $q = 1$ and $\vec{v} = 2\hat{i} + 4\hat{j} + 6\hat{k}$ and $\vec{F} = 4\hat{i} - 20j + 12\hat{k}$

What will be the complete expression for $\vec{B}$?

(1) $6\hat{i} + 6\hat{j} - 8\hat{k}$ (2) $-8\hat{i} - 8\hat{j} - 6\hat{k}$

(3) $-6\hat{i} - 6\hat{j} - 8\hat{k}$ (4) $8\hat{i} + 8\hat{j} - 6\hat{k}$

$\vec{F} = q\,(\vec{v} \times \vec{B})$

$= q\vec{v} \times (B\hat{i} + B\hat{j} + B_0\hat{k})$

என்ற பெருக்குபலனில், $q = 1$ என்றும் $\vec{v} = 2\hat{\imath} + 4\hat{\jmath} + 6\hat{k}$ மற்றும் $\vec{F} = 4\hat{\imath} - 20\hat{\jmath} + 12\hat{k}$ என்க. $\vec{B}$ என்பதன் முழுமையான கோவை யாது?

(1) $6\hat{\imath} + 6\hat{\jmath} - 8\hat{k}$
(2) $-8\hat{\imath} - 8\hat{\jmath} - 6\hat{k}$
(3) $-6\hat{\imath} - 6\hat{\jmath} - 8\hat{k}$
(4) $8\hat{\imath} + 8\hat{\jmath} - 6\hat{k}$

Answer (3)

**40.** Two conducting circular loops of radii $R_1$ and $R_2$ are placed in the same plane with their centres coinciding. If $R_1 >> R_2$, the mutual inductance $M$ between them will be directly proportional to

(1) $\frac{R_2^2}{R_1}$ (2) $\frac{R_1}{R_2}$ (3) $\frac{R_2}{R_1}$ (4) $\frac{R_1^2}{R_2}$

$R_1$ மற்றும் $R_2$ எனும் ஆரங்கள் கொண்ட இரு கடத்தும் வட்ட வடிவ கண்ணிகள், தங்களது மையங்கள் மேற்பொருந்தும்படி சமதளத்தில் அமைக்கப்பட்டுள்ளன. $R_1 >> R_2$ எனில், அவற்றிற்கிடையேயான பரிமாற்ற மின் தூண்டல் எண் M, நேர் விகிதத்தில் பொருந்தியிருப்பது என்பது:

(1) $\frac{R_2^2}{R_1}$ (2) $\frac{R_1}{R_2}$ (3) $\frac{R_2}{R_1}$ (4) $\frac{R_1^2}{R_2}$

Answer (1)

**41.** For the given circuit, the input digital signals are applied at the terminals $A$, $B$ and $C$. What would be the output at the terminal '$y$'?

கொடுக்கப்பட்டுள்ள மின்சுற்றிற்கு, A, B மற்றும் C ஆகிய மின்முனைகளில் எண்ணிலக்க உள்ளீட்டு சைகைகள் அளிக்கப்படுகின்றன. '$y$' மின்முனையில் அமையப் பெறும் வெளியீடு யாது?









Answer (3)

**42.** From a circular ring of mass '$M$' and radius '$R$' an arc corresponding to a 90° sector is removed. The moment of inertia of the remaining part of the ring about an axis passing through the centre of the ring and perpendicular to the plane of the ring is '$K$' times '$MR^2$'. Then the value of '$K$' is

(1) $\frac{1}{8}$

(2) $\frac{3}{4}$

(3) $\frac{7}{8}$

(4) $\frac{1}{4}$

'$M$' நிறையும் '$R$' ஆரமும் கொண்டதொரு வட்ட வடிவ வளையத்தின் 90° வட்டப்பகுதியினது வட்டவில் ஒன்று நீக்கப்படுகிறது. வளையத்தின் மையம் வழியே செல்லும் அச்சினைப் பொருத்தும், வளையத்தின் தளத்திற்கு செங்குத்தாகவும், எஞ்சியிருக்கும் வளையப் பகுதியினது நிலைமத் திருப்புத் திறன், '$MR^2$' யினது 'K' மடங்கு எனில், 'K' யினது மதிப்பு என்பது:

(1) $\frac{1}{8}$

(2) $\frac{3}{4}$

(3) $\frac{7}{8}$

(4) $\frac{1}{4}$

Answer (2)

**43.** Three resistors having resistances $r_1$, $r_2$ and $r_3$ are connected as shown in the given circuit. The ratio $\frac{i_3}{i_1}$ of currents in terms of resistances used in the circuit is

கொடுக்கப்பட்டுள்ள மின்சுற்றில் காட்டப்பட்டுள்ளவாறு $r_1$, $r_2$ மற்றும் $r_3$ மின்தடைகளைப் பெற்றுள்ள மூன்று மின்தடைகள் இணைக்கப்பட்டுள்ளன. மின்சுற்றில்

பயன்படுத்தப்படும் மின்தடைகளைப் பொருத்த, மின்னோட்டங்களது, விகிதம் $\frac{i_3}{i_1}$ என்பது:




(1) $\frac{r_2}{r_1+r_3}$
(2) $\frac{r_1}{r_2+r_3}$
(3) $\frac{r_2}{r_2+r_3}$
(4) $\frac{r_1}{r_1+r_2}$

Answer (3)

**44.** A car starts from rest and accelerates at 5 m/s². At $t$ = 4 s, a ball is dropped out of a window by a person sitting in the car. What is the velocity and acceleration of the ball at $t$ = 6 s?

(1) $20\sqrt{2}$ m/s, 10 m/s²
(2) 20 m/s, 5 m/s²
(3) 20 m/s, 0
(4) $20\sqrt{2}$ m/s, 0

ஒரு கார் ஓய்வு நிலையிலிருந்து துவங்கி, 5 மீ/வி² என்ற வீதத்தில் முடுக்கமடைகிறது. காரில் அமர்ந்துள்ள ஒரு நபர், ஜன்னல் வழியாக, t = 4 வி. என்ற நேரத்தில் ஒரு பந்தினை கீழே போடுகிறார். t = 6 வி. எனும் நேரத்தில் அப்பந்தினது திசைவேகம் மற்றும் முடுக்கம் ஆகியவற்றின் முறையான மதிப்புகள் யாவை? (g = 10 மீ/வி² எனக் கொள்க).

(1) $20\sqrt{2}$ மீ/வி, 10 மீ/வி²
(2) 20 மீ/வி, 5 மீ/வி²
(3) 20 மீ/வி, சுழி
(4) $20\sqrt{2}$ மீ/வி, சுழி

Answer (1)

**45.** A stepdown transformer connected to an ac mains supply of 220 V is made to operate at 11 V, 44 W lamp. Ignoring power losses in the transformer, what is the current in the primary circuit?

(1) 4 A
(2) 0.2 A
(3) 0.4 A
(4) 2 A

220 V a.c. முதன்மை மின்னளிப்பானோடு இணைக்கப்பட்டுள்ள ஓர் இறக்கு மின்மாற்றி 11 V, 44 W கொண்ட மின் விளக்கினை செயல்படுத்துகிறது. மின் மாற்றியில் உள்ள திறன் இழப்புக்களை ஒதுக்கிய பின் அதன் முதன்மை மின்சுற்றில் உள்ள மின்னோட்டம் யாது?

(1) 4 A
(2) 0.2 A
(3) 0.4 A
(4) 2 A

Answer (2)

**46.** A ball of mass 0.15 kg is dropped from a height 10 m, strikes the ground and rebounds to the same height. The magnitude of impulse imparted to the ball is ($g$ = 10 m/s$^2$) nearly

(1) 1.4 kg m/s (2) 0 kg m/s
(3) 4.2 kg m/s (4) 2.1 kg m/s

10 மீட்டர் உயரத்திலிருந்து கீழே போடப்படும் 0.15 கி.கி. நிறை கொண்டதொரு பந்து, தரையைத் தொட்டு சம உயரத்திற்கு மீளத் திரும்புகிறது. அப்பந்துக்கு அளிக்கப்படும் கணத்தாக்கத்திற்கான எண் மதிப்பு என்பது ஏறத்தாழ (g = 10 மீ/வி$^2$):

(1) 1.4 கி.கி. மீ/வி (2) 0 கி.கி. மீ/வி
(3) 4.2 கி.கி. மீ/வி (4) 2.1 கி.கி. மீ/வி

Answer (3)

**47.** A series LCR circuit containing 5.0 H inductor, 80 μF capacitor and 40 Ω resistor is connected to 230 V variable frequency ac source. The angular frequencies of the source at which power transferred to the circuit is half the power at the resonant angular frequency are likely to be

(1) 42 rad/s and 58 rad/s (2) 25 rad/s and 75 rad/s
(3) 50 rad/s and 25 rad/s (4) 46 rad/s and 54 rad/s

வேறுபடும் அதிர்வெண் கொண்ட 230 வோல்ட் ac மூலத்தோடு, 5.0 H மின்தூண்டி, 80 μF மின்தேக்கி மற்றும் 40 Ω மின்தடை கொண்டதொரு தொடர் LCR மின்சுற்று இணைக்கப் பட்டுள்ளது. ஒத்ததிர்வு கோண அதிர்வெண்ணில் அமையும் திறனில் பாதி மதிப்பாக திறனானது மின்சுற்றிற்கு மாற்றம் செய்யப் படும்போது மூலத்தினது கோண அதிர்வெண்கள் என்பன:

(1) 42 rad/s மற்றும் 58 rad/s (2) 25 rad/s மற்றும் 75 rad/s
(3) 50 rad/s மற்றும் 25 rad/s (4) 46 rad/s மற்றும் 54 rad/s

Answer (4)

**48.** A uniform rod of length 200 cm and mass 500 g is balanced on a wedge placed at 40 cm mark. A mass of 2 kg is suspended from the rod at 20 cm and another unknown mass '$m$' is suspended from the rod at 160 cm mark as shown in the figure. Find the value of '$m$' such that the rod is in equilibrium. ($g$ = 10 m/s$^2$)




(1) $\frac{1}{12}$ kg (2) $\frac{1}{2}$ kg
(3) $\frac{1}{3}$ kg (4) $\frac{1}{6}$ kg

200 செ.மீ. நீளமும் 500 கி நிறையும் கொண்டதொரு சீரான தண்டு, அதன் 40 செ.மீ. குறியீட்டில் வைக்கப்பட்டுள்ள கூர்முனையில் சமநிலையில் அமைகிறது. படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, 20 செ.மீ. தொலைவில் 2 கி.கி. நிறை ஒன்றும், 'm' நிறை கொண்ட மற்றொரு நிறை, 160 செ.மீ. குறியீட்டிலும் தண்டிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ளன. தண்டானது சமநிலையில் அமைவதற்கான 'm' அது மதிப்பினைக் கண்டறிக. ($g = 10$ மீ/வி$^2$)




(1) $\frac{1}{12}$ கி.கி.  (2) $\frac{1}{2}$ கி.கி.

(3) $\frac{1}{3}$ கி.கி.  (4) $\frac{1}{6}$ கி.கி.

Answer (1)

**49.** A particle moving in a circle of radius $R$ with a uniform speed takes a time $T$ to complete one revolution. If this particle were projected with the same speed at an angle 'θ' to the horizontal, the maximum height attained by it equals $4R$. The angle of projection, θ, is then given by:

(1) $\theta = \sin^{-1}\left(\frac{2gT^2}{\pi^2 R}\right)^{\frac{1}{2}}$  (2) $\theta = \cos^{-1}\left(\frac{gT^2}{\pi^2 R}\right)^{\frac{1}{2}}$

(3) $\theta = \cos^{-1}\left(\frac{\pi^2 R}{gT^2}\right)^{\frac{1}{2}}$  (4) $\theta = \sin^{-1}\left(\frac{\pi^2 R}{gT^2}\right)^{\frac{1}{2}}$

$R$ ஆரம் கொண்ட வட்டத்தில் சீரான வேகத்தோடு நகரும் ஒரு துகள், ஒரு சுழற்சியினை முடிக்க $T$ நேரம் எடுத்துக் கொள்கிறது.

இத்தகு துகள், கிடைமட்டத்தோடு 'θ' எனும் கோணத்தில் சமமான வேகத்தோடு எறியப்படின், அது அடையும் பெரும உயரம் $4R$ க்குச் சமமாகும். அதன் எறிவுக் கோணம் 'θ' வழங்கப்படுவது என்பது:

(1) $\theta = \sin^{-1}\left(\frac{2gT^2}{\pi^2 R}\right)^{\frac{1}{2}}$  (2) $\theta = \cos^{-1}\left(\frac{gT^2}{\pi^2 R}\right)^{\frac{1}{2}}$

(3) $\theta = \cos^{-1}\left(\frac{\pi^2 R}{gT^2}\right)^{\frac{1}{2}}$  (4) $\theta = \sin^{-1}\left(\frac{\pi^2 R}{gT^2}\right)^{\frac{1}{2}}$

Answer (1)

**50.** A uniform conducting wire of length $12a$ and resistance '$R$' is wound up as a current carrying coil in the shape of,

(i) an equilateral triangle of side '$a$'.

(ii) a square of side '$a$'.

The magnetic dipole moments of the coil in each case respectively are

(1) $4\ Ia^2$ and $3\ Ia^2$
(2) $\sqrt{3}\ Ia^2$ and $3\ Ia^2$
(3) $3\ Ia^2$ and $Ia^2$
(4) $3\ Ia^2$ and $4\ Ia^2$

$12a$ நீளம் மற்றும் '$R$' மின்தடை கொண்டதொரு சீராகக் கடத்தும் மின்கம்பி,

(i) '$a$' எனும் பக்கம் கொண்ட ஒரு சமகோண முக்கோணம்.

(ii) '$a$' எனும் பக்கம் கொண்ட சதுர வடிவிலான மின்னோட்டம் தாங்கிய சுருள்களாக சுழற்றப்பட்டுள்ளது.

இவ்விரு நேர்வுகளில் சுருள்களது காந்த இருமுனை திருப்புத் திறன்கள் என்பன முறையே:

(1) $4\ Ia^2$ மற்றும் $3\ Ia^2$
(2) $\sqrt{3}\ Ia^2$ மற்றும் $3\ Ia^2$
(3) $3\ Ia^2$ மற்றும் $Ia^2$
(4) $3\ Ia^2$ மற்றும் $4\ Ia^2$

Answer (2)

## CHEMISTRY

**51.** Right option for the number of tetrahedral and octahedral voids in hexagonal primitive unit cell are :

(1) 12, 6
(2) 8, 4
(3) 6, 12
(4) 2, 1

முதல்நிலை அறுமுக வடிவம் கொண்ட அலகுக் கூட்டில் உள்ள நான்முகி மற்றும் எண்முகி வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே:

(1) 12, 6
(2) 8, 4
(3) 6, 12
(4) 2, 1

Answer (1)

**52.** Zr (Z = 40) and Hf (Z = 72) have similar atomic and ionic radii beause of:

(1) Having similar chemical properties
(2) Belonging to same group
(3) Diagonal relationship
(4) Lanthanoid contraction

Zr (Z = 40) மற்றும் Hf (Z = 72) இரண்டும் ஒத்த அணு மற்றும் அயனி ஆரங்களைக் கொண்டுள்ளன, ஏனெனில்:

(1) ஒத்த வேதிப் பண்புகளைப் பெற்றுள்ளதால்
(2) ஒரே தொகுதியை சார்ந்தவை
(3) மூலைவிட்ட பண்பு
(4) லாந்தனாய்டு குறுக்கம்

Answer (4)

**53.** Choose the correct option for graphical representation of Boyle's law, which shows a graph of pressure vs. volume of a gas at different temperatures:

(1)



(2)



(3)



(4)



கீழ்கண்ட வரைபடங்களில் எந்த ஒன்று மாறுபட்ட வெப்ப நிலைகளில் ஒரு வாயுவில் ஏற்படும் அழுத்தம் vs. கன அளவை பாயில் விதிப்படி சரியாக குறிப்பிடுகிறது?

(1)



(2)



(3)



(4)



Answer (1)

**54.** The right option for the statement "Tyndall effect is exhibited by", is:

(1) Urea solution
(2) NaCl solution
(3) Glucose solution
(4) Starch solution

கீழ்கண்டவற்றுள் எந்த ஒன்று “டிண்டால் விளைவை” சரியாகக் காட்டுகிறது?

(1) யூரியா கரைசல்
(2) NaCl கரைசல்
(3) குளுக்கோஸ் கரைசல்
(4) ஸ்டார்ச் கரைசல்

Answer (4)

**55.** Which one among the following is the correct option for right relationship between $C_p$ and $C_v$ for one mole of ideal gas?

(1) $C_v = RC_p$
(2) $C_p + C_v = R$
(3) $C_p - C_v = R$
(4) $C_p = RC_v$

ஒரு மோல் நல்லியல்பு வாயுவிற்கான $C_p$ மற்றும் $C_v$ இடையிலான சரியான தொடர்பு எது என்பதை கீழ்கண்டவற்றில் இருந்து தேர்ந்தெடு.

(1) $C_v = RC_p$
(2) $C_p + C_v = R$
(3) $C_p - C_v = R$
(4) $C_p = RC_v$

Answer (3)

**56.** The structures of beryllium chloride in solid state and vapour phase, are:

(1) Chain in both
(2) Chain and dimer, respectively
(3) Linear in both
(4) Dimer and Linear, respectively

திண்ம நிலை மற்றும் ஆவி நிலையில் உள்ள பெரிலியம் குளோரைடின் அமைப்புகள்:

(1) இரண்டும் சங்கிலி அமைப்பு கொண்டவை
(2) முறையே சங்கிலி மற்றும் இருபடித்தானவை
(3) இரண்டும் நேர்கோட்டு அமைப்பு கொண்டது
(4) முறையே இருபடி மற்றும் நேர்கோட்டு அமைப்பு

Answer (2)

**57.** Tritium, a radioactive isotope of hydrogen, emits which of the following particles?

(1) Neutron (n)
(2) Beta ($\beta^-$)
(3) Alpha ($\alpha$)
(4) Gamma ($\gamma$)

கீழே கொடுக்கப்பட்டவற்றுள் கதிரியக்கத் தன்மை கொண்ட ஹைட்ரஜனின் ஐசோடோப்பான ட்ரிடியம் உமிழும் துகள் எது?

(1) நியூட்ரான் (n)
(2) பீட்டா ($\beta^-$)
(3) ஆல்பா ($\alpha$)
(4) காமா ($\gamma$)

Answer (2)

**58.** The major product formed in dehydrohalogenation reaction of 2-Bromo pentane is Pent-2-ene. This product formation is based on?

(1) Huckel's Rule (2) Saytzeff's Rule
(3) Hund's Rule (4) Hofmann Rule

2-புரோமோபென்டேனை, ஹைட்ரோஹேலஜன் நீக்கம் செய்யும் வினையில் பென்ட்-2-ஈன் மிகுதியான விளைபொருளாக கிடைக்கிறது. இவ்விளைபொருள் கீழ்கண்ட எந்த விதியின் அடிப்படையில் உருவாகிறது?

(1) ஹக்கல் விதி (2) செயிட்செப் விதி
(3) ஹூண்ட் விதி (4) ஹாப்மன் விதி

Answer (2)

**59.** $BF_3$ is planar and electron deficient compound. Hybridization and number of electrons around the central atom, respectively are:

(1) $sp^2$ and 8 (2) $sp^3$ and 4
(3) $sp^3$ and 6 (4) $sp^2$ and 6

$BF_3$ ஒரு சமதள அமைப்பு மற்றும் கறை எலக்ட்ரான் கொண்ட சேர்மம். இதன் மைய அணுவின் இனக்கலப்பு மற்றும் அதனை சுற்றியுள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை, முறையே:

(1) $sp^2$ மற்றும் 8 (2) $sp^3$ மற்றும் 4
(3) $sp^3$ மற்றும் 6 (4) $sp^2$ மற்றும் 6

Answer (4)

**60.** What is the IUPAC name of the organic compound formed in the following chemical reaction?

$$\text{Acetone} \xrightarrow[\text{(ii) } H_2O,\, H^+]{\text{(i) } C_2H_5MgBr,\ \text{dry Ether}} \text{Product}$$

(1) 2-methylbutan-2-ol (2) 2-methylpropan-2-ol
(3) pentan-2-ol (4) pentan-3-ol

கீழ்கண்ட வினையில் உருவாகும் கரிமச் சேர்மத்தின் IUPAC பெயர் என்ன?

$$\text{அசிட்டோன்} \xrightarrow[\text{(ii) } H_2O,\, H^+]{\text{(i) } C_2H_5MgBr,\ \text{உலர் ஈதர்}} \text{விளைபொருள்}$$

(1) 2-மெத்தில் பியூட்டன்-2-ஆல்
(2) 2-மெத்தில் புரப்பன்-2-ஆல்
(3) பென்டன்-2-ஆல்
(4) பென்டன்-3-ஆல்

Answer (1)

**61.** The RBC efficiency is deficiency disease of:

(1) Vitamin $B_2$ (2) Vitamin $B_{12}$
(3) Vitamin $B_6$ (4) Vitamin $B_1$

RBC குறைபாடு கீழ்கண்ட எந்த ஒன்றின் குறைபாட்டு நோய்?

(1) வைட்டமின் $B_2$ (2) வைட்டமின் $B_{12}$
(3) வைட்டமின் $B_6$ (4) வைட்டமின் $B_1$

Answer (2)

**62.** The molar conductance of NaCl, HCl and $CH_3COONa$ at infinite dilution are 126.45, 426.16 and 91.0 S $cm^2$ $mol^{-1}$ respectively. The molar conductance of $CH_3COOH$ at infinite dilution is. Choose the right option for your answer.

(1) 540.48 S $cm^2$ $mol^{-1}$ (2) 201.28 S $cm^2$ $mol^{-1}$
(3) 390.71 S $cm^2$ $mol^{-1}$ (4) 698.28 S $cm^2$ $mol^{-1}$

அளவிலா நீர்த்தலில் NaCl, HCl மற்றும் $CH_3COONa$ ஆகியவற்றின் மோலார் கடத்துதிறன் முறையே 126.45, 426.16 மற்றும் 91.0 S $cm^2$ $mol^{-1}$ எனில், அளவிலா நீர்த்தல் நிலையில் $CH_3COOH$-ன் மோலார் கடத்துதிறனின் சரியான மதிப்பை கீழ்கண்ட தெரிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கவும்.

(1) 540.48 S $cm^2$ $mol^{-1}$ (2) 201.28 S $cm^2$ $mol^{-1}$
(3) 390.71 S $cm^2$ $mol^{-1}$ (4) 698.28 S $cm^2$ $mol^{-1}$

Answer (3)

**63.** The incorrect statement among the following is :

(1) Actinoids are highly reactive metals, especially when finely divided.
(2) Actinoid contraction is greater for element to element than lanthanoid contraction
(3) Most of the trivalent Lanthanoid ions are colorless in the solid state
(4) Lanthanoids are good conductors of heat and electricity.

கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறான கூற்று எது?

(1) நன்கு தூளாக்கப்பட்ட நிலையில் ஆக்டினாய்டுகள் மிகவும் வினைத்திறன் மிக்க உலோகங்கள்.
(2) லாந்தனாய்டு குறுக்கத்துடன் ஒப்பிடும் போது தனிமங்களுக்கு இடையிலான ஆக்டினாய்டு குறுக்கம் அதிகம்.
(3) திண்ம நிலையில், மூன்று இணைதிறன் கொண்ட பெரும்பாலான லாந்தனாய்டு அயனிகள் நிறமற்றவை.
(4) லாந்தனாய்டுகள் சிறந்த வெப்ப மற்றும் மின் கடத்திகள்.

Answer (3)

**64.** Statement I: Acid strength increases in the order given as HF << HCl << HBr << Hl.

Staement II: As the size of the elements F, Cl, Br, I Increases down the group, the bond strength of HF, HCl, HBr and Hl decreases and so the acid strength increases.

In the light of the above statements, choose the correct answer from the options given below:

(1) Statement I is incorrect but Statement II is true

(2) Both Statement I and Statement II are true

(3) Both Statement I and Statement II are false

(4) Statement I correct but Statement II is false

கூற்று I: கீழே கொடுக்கப்பட்ட வரிசையில் அமிலத் தன்மை உயர்கிறது. HF << HCl << HBr << Hl.

கூற்று II: F, Cl, Br, I ஆகியவற்றின் உருவளவு அதன் தொகுதியில் மேலிருந்து கீழே செல்லும் போது உயருகிறது. எனவே HF << HCl << HBr மற்றும் Hl ஆகியவற்றின் பிணைப்பு வலிமை குறைகிறது. ஆதலால் அவற்றின் அமிலத் தன்மை உயருகிறது.

மேற்கண்ட கூற்றுகளின் அடிப்படையில் கீழ்கண்ட தெரிவுகளில் இருந்து மிகவும் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) கூற்று I தவறு ஆனால் கூற்று II சரி.

(2) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் சரி.

(3) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் தவறு.

(4) கூற்று I சரி ஆனால் கூற்று II தவறு.

Answer (2)

**65.** The correct structure of 2, 6-Dimethyl-dec-4-ene is

2, 6-டைமெத்தில்-டெக்-4-ஈன் -ன் சரியான அமைப்பு:

(1)



(2)



(3)



(4)



Answer (2)

**66.** The correct sequence of bond enthalpy of 'C – X' bond is:

(1) $CH_3 - Cl > CH_3 - F > CH_3 - Br > CH_3 - I$

(2) $CH_3 - F < CH_3 - Cl < CH_3 - Br < CH_3 - I$

(3) $CH_3 - F > CH_3 - Cl > CH_3 - Br > CH_3 - I$
(4) $CH_3 - F < CH_3 - Cl > CH_3 - Br > CH_3 - I$

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில், 'C-X' பிணைப்பின் பிணைப்பு வெப்பம் (அ) என்தால்பி -யின் சரியான தொடர் வரிசை:

(1) $CH_3 - Cl > CH_3 - F > CH_3 - Br > CH_3 - I$
(2) $CH_3 - F < CH_3 - Cl < CH_3 - Br < CH_3 - I$
(3) $CH_3 - F > CH_3 - Cl > CH_3 - Br > CH_3 - I$
(4) $CH_3 - F < CH_3 - Cl > CH_3 - Br > CH_3 - I$

Answer (3)

**67.** A particular station of All India Radio, New Delhi broadcasts on a frequency of 1,368 kHz (kilohertz). The wavelength of the electromagnetic radiation emitted by the transmitter is: [speed of light $c = 3.0 \times 10^8\ ms^{-1}$]

(1) 21.92 cm (2) 219.3 m
(3) 219.2 m (4) 2192 m

அனைத்திந்திய வானொலி புது தில்லியின் ஒரு குறிப்பிட்ட ஒலிபரப்பு நிலையத்திலிருந்து நிகழ்ச்சிகள் 1,368 kHz (கிலோ ஹெர்ட்ஸ்) என்ற அதிர்வெண்ணில் ஒலிபரப்பு செய்யப்படுகிறது. எனில், அந்த ஒலிபரப்பியில் இருந்து வெளிப்படும் மின்காந்த கதிரின் அலைநீளம் [ஒளியின் வேகம், $c = 3.0 \times 10^8\ ms^{-1}$]

(1) 21.92 செ.மீ. (2) 219.3 மீ.
(3) 219.2 மீ. (4) 2192 மீ.

Answer (2)

**68.** The $pK_b$ of dimethylamine and $pK_a$ of acetic acid are 3.27 and 4.77 respectively at T (K). The correct option for the pH of dimethylammonium acetate solution is:

(1) 6.25 (2) 8.50
(3) 5.50 (4) 7.75

T (K) – வில் டைமெத்தில் அமீனின் $pK_b$ மற்றும் அசிட்டிக் அமிலத்தின் $pK_a$ மதிப்புகள் முறையே 3.27 மற்றும் 4.77 எனில், டைமெத்தில் அமோனியம் அசிட்டேட் கரைசலின் pH-ன் சரியான மதிப்பு:

(1) 6.25 (2) 8.50
(3) 5.50 (4) 7.75

Answer (4)

**69.** The following solutions were prepared by dissolving 10 g of glucose ($C_6H_{12}O_6$) in 250 ml of water ($P_1$), 10 g of urea ($CH_4N_2O$) in 250 ml of water ($P_2$) and 10 g of sucrose ($C_{12}H_{22}O_{11}$) in 250 ml of water ($P_3$). The right option for the decreasing order of osmotic pressure of these solutions is:

(1) $P_3 > P_1 > P_2$
(2) $P_2 > P_1 > P_3$
(3) $P_1 > P_2 > P_3$
(4) $P_2 > P_3 > P_1$

கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று கரைசல்கள் 250 ml நீரில் 10g குளுக்கோஸ் ($C_6H_{12}O_6$) ($P_1$), 250 ml நீரில் 10g யூரியா ($CH_4N_2O$) ($P_2$) மற்றும் 250 ml நீரில் 10g சுக்ரோஸ் ($C_{12}H_{22}O_{11}$) ($P_3$) தயாரிக்கப்பட்டுள்ளன. இக்கரைசல்களின் சவ்வூடுபரவல் அழுத்தத்திற்கான சரியான இறங்கு வரிசை எது என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) $P_3 > P_1 > P_2$
(2) $P_2 > P_1 > P_3$
(3) $P_1 > P_2 > P_3$
(4) $P_2 > P_3 > P_1$

Answer (2)

**70.** The correct option for the number of body centred unit cells in all 14 types of Bravais lattice unit cells

(1) 3 (2) 7
(3) 5 (4) 2

அனைத்து 14 வகை பிராவிஸ் படிக அலகு கூடுகளிலும் உள்ள பொருள் மைய அலகு கூடுகளின் எண்ணிக்கை எது என்பதைத் தேர்ந்தெடு?

(1) 3 (2) 7
(3) 5 (4) 2

Answer (1)

**71.** The maximum temperature that can be achieved in blast furnace is:

(1) Upto 5000 K
(2) Upto 1200 K
(3) Upto 2200 K
(4) Upto 1900 K

ஒரு உருக்கு உலையில் உண்டாகும் உயர்ந்தபட்ச வெப்பநிலை:

(1) 5000 K வரை
(2) 1200 K வரை
(3) 2200 K வரை
(4) 1900 K வரை

Answer (3)

**72.** For a reaction A → B, enthalpy of reaction is – 4.2 kJ $mol^{-1}$ and enthalpy of activation is 9.6 kJ $mol^{-1}$. The correct potential energy profile for the reaction is shown in option.

A → B என்ற வினையின் வினைவெப்பம் – 4.2 kJ $mol^{-1}$ மற்றும் அதன் கிளர்வு கொள் என்தால்பி (அ) வெப்பம் 9.6 kJ $mol^{-1}$ எனில், கீழ்கண்ட நிலையாற்றல் வரைபடங்களில் எந்த ஒன்று இவ்வினையை சரியாக விளக்குகிறது?

(1)




(2)




(3)




(4)




Answer (3)

**73.** The compound which shows metamerism is:

(1) $C_4H_{10}O$
(2) $C_5H_{12}$
(3) $C_3H_8O$
(4) $C_3H_6O$

கீழ்கண்ட சேர்மங்களில் இணை மாற்றியத்தை காட்டும் சேர்மம் எது?

(1) $C_4H_{10}O$
(2) $C_5H_{12}$
(3) $C_3H_8O$
(4) $C_3H_6O$

Answer (1)

**74.** The major product of the following chemical reaction is:
கீழ்கண்ட வேதிவினையில் உருவாகும் மிகுதியான விளைபொருள்:



(1) 

(2) 

(3) 

(4) 

Answer (2)

**75.** Which of the following reactions is the metal displacement reaction? Choose the right option.
(1) $2Pb(NO_3)_2 \rightarrow 2PbO + 4NO_2 + O_2\uparrow$
(2) $2KClO_3 \xrightarrow{\Delta} 2KCl + 3O_2$
(3) $Cr_2O_3 + 2Al \xrightarrow{\Delta} Al_2O_3 + 2Cr$
(4) $Fe + 2HCl \rightarrow FeCl_2 + H_2\uparrow$
கீழ்கண்ட வினைகளில் எது உலோக இடப்பெயர்ச்சி வினை என்பதை தேர்ந்தெடுக்கவும்.
(1) $2Pb(NO_3)_2 \rightarrow 2PbO + 4NO_2 + O_2\uparrow$
(2) $2KClO_3 \xrightarrow{\Delta} 2KCl + 3O_2$
(3) $Cr_2O_3 + 2Al \xrightarrow{\Delta} Al_2O_3 + 2Cr$
(4) $Fe + 2HCl \rightarrow FeCl_2 + H_2\uparrow$
Answer (3)

**76.** Given below are two statements:
**Statement I:** Aspirin and Paracetamol belong to the class of narcotic analgesics.
**Statement II:** Morphine and Heroin are non-narcotic analgesics.
In the light of the above statements, choose the correct answer from the options given below:
(1) **Statement I** is incorrect but **Statement II** is true.

(2) Both **Statement I** and **Statement II** are true
(3) Both **Statement I** and **Statement II** are false
(4) **Statement I** is correct but **Statement II** is false

கீழே இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

கூற்று I : ஆஸ்பிரின் மற்றும் பாராசிட்டமால் – போதை தரும் வலி நீக்கிகளாகும்.

கூற்று II : மார்பின் மற்றும் ஹெராயின் போதை தராத வலி நீக்கிகளாகும்.

மேற்கண்ட கூற்றுகளின் அடிப்படையில் கீழ்கண்ட தெரிவுகளில் இருந்து மிகவும் சரியானதை தேர்ந்தெடுக்கவும்.

(1) கூற்று I தவறு ஆனால் கூற்று II சரி.
(2) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் சரி.
(3) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் தவறு.
(4) கூற்று I சரி ஆனால் கூற்று II தவறு.

Answer (3)

**77.** Ethylene diaminetetraacetate (EDTA) ion is:
(1) Tridentate ligand with three “N” donor atoms
(2) Hexadentate ligand with four “O” and two “N” donor atoms
(3) Unidentate ligand
(4) Bidentate ligand with two “N” donor atoms

எத்திலின் டைஅமின் டெட்ரா அசிடேட் (EDTA) அயனி என்பது:
சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) மூன்று “N” வழங்கி அணுக்களைக் கொண்ட மூன்று ஈதல் சகப் பிணைப்புகளை உருவாக்கும். ஈனி.
(2) நான்கு “O” மற்றும் இரண்டு “N” வழங்கி அணுக்களைக் கொண்ட ஆறு ஈதல் சகப் பிணைப்புகளை உருவாக்கும் ஈனி.
(3) ஒற்றை ஈதல் சகப் பிணைப்பை உருவாக்கும் ஈனி.
(4) இரண்டு “N” வழங்கி அணுக்களைக் கொண்ட இரண்டு ஈதல் சகப் பிணைப்புகளை உருவாக்கும் ஈனி.

Answer (2)

**78.** Which one of the following methods can be used to obtain highly pure metal which is liquid at room temperature ?

(1) Zone refining | (2) Electrolysis
(3) Chromatography | (4) Distillation

கீழ்கண்ட முறைகளில் எந்த ஒன்று அறை வெப்பநிலையில் திரவ நிலையில் உள்ள உலோகத்தை மிகவும் தூய்மையான நிலையில் பெற பயன்படுகிறது?

(1) புலத்தூய்மையாக்கல் | (2) மின்னாற்பகுப்பு

(3) வண்ணப்பிரிகை முறை (4) வாலைவடித்தல்

Answer (4)

**79.** Identify the compound that will react with Hinsberg's reagent to give a solid which dissolves in alkali.

கீழ்கண்ட சேர்மங்களில் எது ஹின்ஸ்பெர்க் வினைகரணியுடன் வினைபட்டு காரத்தில் கரையும் திண்ம விளைபொருளைத் தருகிறது?

(1) 

(2) 

(3) 

(4) 

Answer (4)

**80.** Among the following alkaline earth metal halides, one which is covalent and soluble in organic solvents is:

(1) Beryllium chloride (2) Calcium chloride

(3) Strontium chloride (4) Magnesium chloride

கீழே கொடுக்கப்பட்டுள்ள காரமண் உலோக ஹேலைடுகளில் எந்த ஒன்று சகப்பிணைப்புத் தன்மை மற்றும் கரிம கரைப்பான்களில் கரையும் தன்மைகளைக் கொண்டுள்ளது:

(1) பெரிலியம் குளோரைடு (2) கால்சியம் குளோரைடு

(3) ஸ்ட்ரான்சியம் குளோரைடு (4) மெக்னீசியம் குளோரைடு

Answer (1)

**81.** Dihedral angle of least stable conformer of ethane is:

(1) 0° (2) 120°

(3) 180° (4) 60°

மிகக் குறைந்த நிலைப்புத் தன்மை கொண்ட ஈத்தேனின் தள இடைக்கோண மதிப்பு:

(1) 0° (2) 120°

(3) 180° (4) 60°

Answer (1)

**82.** An organic compound contains 78% (by wt.) carbon and remaining percentage of hydrogen. The right option for the empirical formula of this compound is :
[Atomic wt. of C is 12, H is 1]

(1) $CH_4$ (2) CH
(3) $CH_2$ (4) $CH_3$

ஒரு கரிமச் சேர்மம் அதன் எடையில் 78% கார்பைனையும் மீதம் உள்ள சதவீத அளவில் ஹைட்ரஜனையும் கொண்டுள்ளது எனில், அந்த சேர்மத்தின் முற்றுறா வாய்பாடு எது என்பதை கீழ்கண்ட தெரிவுகளில் இருந்து கண்டுபிடி.
[அணு எடை C = 12, H = 1]

(1) $CH_4$ (2) CH
(3) $CH_2$ (4) $CH_3$

Answer (4)

**83.** Noble gases are named because of their inertness towards reactivity. Identify an incorrect statement about them.

(1) Noble gases have large positive values of electron gain enthalpy
(2) Noble gases are sparingly soluble in water
(3) Noble gases have very high melting and boiling points
(4) Noble gases have weak dispersion forces

மந்த வாயுக்கள் என்பன அவற்றின் வினையில் ஈடுபடாத தன்மைக் காரணமாக அப்பெயரை பெறுகின்றன. கீழே கொடுக்கப்பட்ட கூற்றுகளில் எந்த ஒன்று மந்த வாயுக்களுக்குப் பொருந்தாது?

(1) மந்த வாயுக்கள் அதிக நேர் மதிப்பில் எலக்ட்ரான் கொள் வெப்பத்தை (என்தால்பியை) கொண்டுள்ளன.
(2) மந்த வாயுக்கள் நீரில் மிகக் குறைந்த அளவே கரைகின்றன.
(3) மந்த வாயுக்கள் மிக உயரிய உருகுநிலை மற்றும் கொதிநிலையைக் கொண்டுள்ளன.
(4) மந்த வாயுக்கள் வலிமையற்ற சிதறல் விசைகளைக் கொண்டுள்ளன.

Answer (3)

**84.** Which one of the following polymers is prepared by addition polymerisation?

(1) Dacron (2) Teflon
(3) Nylon-66 (4) Novolac

கீழே கொடுக்கப்பட்ட பலபடிகளில் எந்த ஒன்று சேர்ப்பு பலபடியாக்கல் முறையில் தயாரிக்கப் படுகிறது?

(1) டெக்கரான் (2) டெப்லான்
(3) நைலான்-66 (4) நோவாலாக்

Answer (2)

**85.** Match List – I with List – II.

| **List – I** | **List – II** |
|---|---|
| (a) $PCl_5$ | (i) Square pyramidal |
| (b) $SF_6$ | (ii) Trigonal planar |
| (c) $BrF_5$ | (iii) Octahedral |
| (d) $BF_3$ | (iv) Trigonal bipyramidal |

Choose the correct answer from the options given below:

(1) (a) – (iv), (b) – (iii), (c) – (ii), (d) – (i)

(2) (a) – (iv), (b) – (iii), (c) – (i), (d) – (ii)

(3) (a) – (ii), (b) – (iii), (c) – (iv), (d) – (i)

(4) (a) – (iii), (b) – (i), (c) – (iv), (d) – (ii)

தொகுதி – I ஐ தொகுதி – II உடன் பொருத்துக.

| **தொகுதி – I** | **தொகுதி – II** |
|---|---|
| (a) $PCl_5$ | (i) சதுர பிரமிடு |
| (b) $SF_6$ | (ii) சமதள முக்கோணம் |
| (c) $BrF_5$ | (iii) எண்முகி |
| (d) $BF_3$ | (iv) முக்கோண இருபிரமிடு |

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புகளில் இருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) (a) – (iv), (b) – (iii), (c) – (ii), (d) – (i)

(2) (a) – (iv), (b) – (iii), (c) – (i), (d) – (ii)

(3) (a) – (ii), (b) – (iii), (c) – (iv), (d) – (i)

(4) (a) – (iii), (b) – (i), (c) – (iv), (d) – (ii)

Answer (2)

## SECTION – B

**86.** For irreversible expansion of an ideal gas under isothermal condition, the correct option is:

(1) $\Delta U \neq 0, \Delta S_{total} = 0$  (2) $\Delta U = 0, \Delta S_{total} = 0$

(3) $\Delta U \neq 0, \Delta S_{total} \neq 0$  (4) $\Delta U = 0, \Delta S_{total} \neq 0$

கீழ்கண்ட தெரிவுகளில் எந்த ஒன்று வெப்ப நிலை மாறா நிபந்தனையில் ஒரு நல்லியல்பு வாயுவின் மீளா விரிவாக்க செயல்முறைக்கான சரியான தேர்வாகும்?

(1) $\Delta U \neq 0, \Delta S_{\text{மொத்தம்}} = 0$  (2) $\Delta U = 0, \Delta S_{\text{மொத்தம்}} = 0$

(3) $\Delta U \neq 0, \Delta S_{\text{மொத்தம்}} \neq 0$  (4) $\Delta U = 0, \Delta S_{\text{மொத்தம்}} \neq 0$

Answer (4)

**87.** Match List – I with List – II.

| **List – I** | **List – II** |
|---|---|
| (a) $[Fe(CN)_6]^{3-}$ | (i) 5.92 BM |
| (b) $[Fe(H_2O)_6]^{3+}$ | (ii) 0 BM |

(c) $[Fe(CN)_6]^{2+}$ (iii) 4.90 BM

(d) $BF_3$ (iv) 1.73 BM

Choose the correct answer from the options given below:

(1) (a) – (iv), (b) – (i), (c) – (ii), (d) – (iii)

(2) (a) – (iv), (b) – (ii), (c) – (i), (d) – (iii)

(3) (a) – (ii), (b) – (iv), (c) – (iii), (d) – (i)

(4) (a) – (i), (b) – (iii), (c) – (iv), (d) – (ii)

தொகுதி – I ஐ தொகுதி – II உடன் பொருத்துக.

| தொகுதி – I | தொகுதி – I |
|---|---|
| (a) $[Fe(CN)_6]^{3-}$ | (i) 5.92 BM |
| (b) $[Fe(H_2O)_6]^{3+}$ | (ii) 0 BM |
| (c) $[Fe(CN)_6]^{2+}$ | (iii) 4.90 BM |
| (d) $BF_3$ | (iv) 1.73 BM |

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புகளில் இருந்து சரியானதை தேர்ந்தெடுக்கவும்.

(1) (a) – (iv), (b) – (i), (c) – (ii), (d) – (iii)

(2) (a) – (iv), (b) – (ii), (c) – (i), (d) – (iii)

(3) (a) – (ii), (b) – (iv), (c) – (iii), (d) – (i)

(4) (a) – (i), (b) – (iii), (c) – (iv), (d) – (ii)

Answer (1)

**88.** In which one of the following arrangements the given sequence is not strictly according to the properties indicated against it?

| | | |
|---|---|---|
| (1) $CO_2 < SiO_2 < SnO_2 < PbO_2$ | : | Increasing oxidizing power |
| (2) $HF < HCl < HBr < HI$ | : | Increasing acidic strength |
| (3) $H_2O < H_2S < H_2Se < H_2Te$ | : | Increasing $pK_a$ values |
| (4) $NH_3 < PH_3 < AsH_3 < SbH_3$ | : | Increasing acidic character |

கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்களில் எந்த ஒன்று அதற்கு எதிராக கொடுக்கப்பட்ட பண்புடன் பொருந்தவில்லை?

| | | |
|---|---|---|
| (1) $CO_2 < SiO_2 < SnO_2 < PbO_2$ | : | ஆக்ஸிஜனேற்ற திறன் உயருதல் |
| (2) $HF < HCl < HBr < HI$ | : | அமிலத்தன்மை உயருதல் |
| (3) $H_2O < H_2S < H_2Se < H_2Te$ | : | $pK_a$ மதிப்பு உயருதல் |
| (4) $NH_3 < PH_3 < AsH_3 < SbH_3$ | : | அமிலத்தன்மை உயருதல் |

Answer (3)

**89.** $$CH_3CH_3COO^-Na^+ \xrightarrow[\text{Heat}]{\text{NaOH, +?}} CH_3CH_3 + Na_2CO_3.$$

Consider the above reaction and identify the missing reagent/chemical.

(1) DIBAL-H (2) $B_2H_6$

(3) Red Phosphorus (4) CaO

$$CH_3CH_2COO^-Na^+ \xrightarrow[\text{சூடுபடுத்துதல்}]{NaOH,\ +?} CH_3CH_3 + Na_2CO_3.$$

என்ற மேற்கண்ட வினை நிகழத் தேவைப்படும் விடுபட்டுள்ள வினைகரணியை கண்டுபிடி.

(1) DIBAL-H
(2) $B_2H_6$
(3) சிவப்பு பாஸ்பரஸ்
(4) CaO

Answer (4)

**90.** Which of the following molecules is non-polar in nature?

(1) $NO_2$
(2) $POCl_3$
(3) $CH_2O$
(4) $SbCl_5$

கீழ்கண்ட மூலக்கூறுகளில் எது முனைவற்ற தன்மை கொண்டது?

(1) $NO_2$
(2) $POCl_3$
(3) $CH_2O$
(4) $SbCl_5$

Answer (4)

**91.** Match List – I with List – II.

| **List – I** | **List – II** |
|---|---|
| (a) $2SO_2(g) + O_2(g) \rightarrow 2SO_3(g)$ | (i) Acid rain |
| (b) $HOCl(g) \xrightarrow{hv} \dot{O}H + \dot{C}l$ | (ii) Smog |
| (c) $CaCO_3 + H_2SO_4 \rightarrow CaSO_4 + H_2O + CO_2$ | (iii) Ozone depletion |
| (d) $NO_2(g) \xrightarrow{hv} NO(g) + O(g)$ | (iv) Tropospheric pollution |

Choose the correct answer from the options given below:

(1) (a) – (iii), (b) – (ii), (c) – (iv), (d) – (i)
(2) (a) – (i), (b) – (ii), (c) – (iii), (d) – (iv)
(3) (a) – (ii), (b) – (iii), (c) – (iv), (d) – (i)
(4) (a) – (iv), (b) – (iii), (c) – (i), (d) – (ii)

தொகுதி – I ஐ தொகுதி – II உடன் பொருத்துக.

| தொகுதி – I | தொகுதி – II |
|---|---|
| (a) $2SO_2(g) + O_2(g) \rightarrow 2SO_3(g)$ | (i) அமில மழை |
| (b) $HOCl(g) \xrightarrow{hv} \dot{O}H + \dot{C}l$ | (ii) பனிப்புகை |
| (c) $CaCO_3 + H_2SO_4 \rightarrow CaSO_4 + H_2O + CO_2$ | (iii) ஓசோன் படலம் சிதைவடைதல் |
| (d) $NO_2(g) \xrightarrow{hv} NO(g) + O(g)$ | (iv) அடிவெளிப் பகுதி (ட்ரோபோஸ்பியர் மாசடைதல்) |

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புகளில் சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) (a) – (iii), (b) – (ii), (c) – (iv), (d) – (i)
(2) (a) – (i), (b) – (ii), (c) – (iii), (d) – (iv)

(3) (a) – (ii), (b) – (iii), (c) – (iv), (d) – (i)
(4) (a) – (iv), (b) – (iii), (c) – (i), (d) – (ii)
Answer (4)

**92.** The molar conductivity of 0.007 M acetic acid is 20 S cm² mol⁻¹. What is the dissociation constant of acetic acid? Choose the correct option.

$$\begin{bmatrix} \Lambda^{\circ}_{H^+} = 350\ S\ cm^2\ mol^{-1} \\ \Lambda^{\circ}_{CH_3COO^-} = 50\ S\ cm^2\ mol^{-1} \end{bmatrix}$$

(1) $2.50 \times 10^{-5}$ mol $L^{-1}$ (2) $1.75 \times 10^{-4}$ mol $L^{-1}$
(3) $2.50 \times 10^{-4}$ mol $L^{-1}$ (4) $1.75 \times 10^{-5}$ mol $L^{-1}$

0.007 M அசிட்டிக் அமிலத்தின் மோலார் கடத்து திறன் 20 S $cm^2$ $mol^{-1}$ எனில், அசிட்டிக் அமிலத்தின் பிரிகை மாறிலியின் மதிப்பு யாது?

$$\begin{bmatrix} \Lambda^{\circ}_{H^+} = 350\ S\ cm^2\ mol^{-1} \\ \Lambda^{\circ}_{CH_3COO^-} = 50\ S\ cm^2\ mol^{-1} \end{bmatrix}$$

(1) $2.50 \times 10^{-5}$ mol $L^{-1}$ (2) $1.75 \times 10^{-4}$ mol $L^{-1}$
(3) $2.50 \times 10^{-4}$ mol $L^{-1}$ (4) $1.75 \times 10^{-5}$ mol $L^{-1}$
Answer (4)

**93.** Choose the correct option for the total pressure (in atm.) in a mixture of 4 g $O_2$ and 2 g $H_2$ confined in a total volume of one litre at 0°C is:
[Given R = 0.082 L atm $mol^{-1}K^{-1}$, T = 273 K]
(1) 26.02 (2) 2.518
(3) 2.602 (4) 25.18

0°C – யில் 4 g $O_2$ மற்றும் 2 g $H_2$ – ஐ 1 லிட்டர் மொத்த கன அளவில் கொண்ட கலவையின் மொத்த அழுத்தம் (atm – ல்) எது என்பதை கீழ்கண்ட தெரிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கவும்.
[கொடுக்கப்பட்டுள்ளது: R = 0.082 L atm $mol^{-1}K^{-1}$, T = 273K]
(1) 26.02 (2) 2.518
(3) 2.602 (4) 25.18
Answer (4)

**94.** The correct option for the value of vapour pressure of a solution at 45°C with benzene to octane in molar ratio 3:2 is :
[At 45°C vapour pressure of benzene is 280 mm Hg and that of octane is 420 mm Hg. Assume Ideal gas]
(1) 350 mm of Hg (2) 160 mm of Hg

(3) 168 mm of Hg (4) 336 mm of Hg

45°C – ல் பென்சீன் மற்றும் ஆக்டேன் ஆகியவற்றை 3:2 என்ற மோலார் விகிதத்தில் கொண்டுள்ள கரைசலின் சரியான ஆவி அழுத்த மதிப்பு:

[45°C பென்சீனின் ஆவி அழுத்தம் 280 mm Hg மற்றும் ஆக்டேனின் ஆவி அழுத்தம் 420 mm Hg. மேலும் நல்லியல்பு வாயுக்கள் எனக் கருதுக.]

(1) 350 mm of Hg (2) 160 mm of Hg

(3) 168 mm of Hg (4) 336 mm of Hg

Answer (4)

**95.** From the following pairs of ions which one is not an iso-electronic pair?

(1) $Fe^{2+}$, $Mn^{2+}$ (2) $O^{2-}$, $F^-$

(3) $Na^+$, $Mg^{2+}$ (4) $Mn^{2+}$, $Fe^{3+}$

கீழே கொடுக்கப்பட்டுள்ள இணை அயனிகளில் எந்த ஒன்று ஒத்த எலக்ட்ரான் அமைப்பை பெற்றிருக்காது?

(1) $Fe^{2+}$, $Mn^{2+}$ (2) $O^{2-}$, $F^-$

(3) $Na^+$, $Mg^{2+}$ (4) $Mn^{2+}$, $Fe^{3+}$

Answer (1)

**96.** The intermediate compound 'X' in the following chemical reaction is:

கீழ்கண்ட வினையில் உருவாகும் இடைநிலைப் பொருள் 'X' என்பது:




(1)



(2)



(3)



(4)



Answer (2)

VETRII NEET GATEWAY Since 2011

**97.** The reagent 'R' in the given sequence of chemical reaction is:
கீழ்கண்ட வினைத்தொடரில் பயன்படும் 'R' என்ற வினை கரணி:




(1) CuCN/KCN
(2) $H_2O$
(3) $CH_3CH_2OH$
(4) HI
Answer (3)

**98.** The slope of Arrhenius plot $\left(\ln k\ v/s\ \frac{1}{T}\right)$ of first order reaction is $-5 \times 10^3$K. The value of $E_a$ of the reaction is. Choose the correct option for your answer.
[Given R = 8.314 $JK^{-1}mol^{-1}$]
(1) – 83 kJ $mol^{-1}$
(2) 41.5 kJ $mol^{-1}$
(3) 83.0 kJ $mol^{-1}$
(4) 166 kJ $mol^{-1}$

அர்ஹீனியஸ் சமன்பாட்டின்படி வரையப்பட்ட $\left(\ln k\ v/s\ \frac{1}{T}\right)$ ஒரு முதல் வகை வினைக்கான வரைபடத்தின் சாய்வு $-5 \times 10^3$K எனில், அந்த வினையின் $E_a$ மதிப்பு எது என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
[கொடுக்கப்பட்டது: R = 8.314 $JK^{-1}mol^{-1}$]
(1) – 83 kJ $mol^{-1}$
(2) 41.5 kJ $mol^{-1}$
(3) 83.0 kJ $mol^{-1}$
(4) 166 kJ $mol^{-1}$
Answer (2)

**99.** Match List – I with List – II

| List – I | List – II |
|---|---|
| (a)  | (i) Hell-Volhard-Zelinsky reaction |
| (b) $R-\overset{O}{\overset{\parallel}{C}}-CH_3 + NaOX \longrightarrow$ | (ii) Gattermann-Koch reaction |
| (c) $R-CH_2-OH + R'COOH \xrightarrow{\text{Conc. } H_2SO_4}$ | (iii) Haloform reaction |
| (d) $R-CH_2COOH \xrightarrow[\text{(ii) } H_2O]{\text{(i) } X_2/\text{Red P}}$ | (iv) Esterification |

Choose the correct answer from the options given below:

(1) (a) – (ii), (b) – (iii), (c) – (iv), (d) – (i)
(2) (a) – (iv), (b) – (i), (c) – (ii), (d) – (iii)
(3) (a) – (iii), (b) – (ii), (c) – (i), (d) – (iv)
(4) (a) – (i), (b) – (iv), (c) – (iii), (d) – (ii)

தொகுதி – I ஐ தொகுதி – II உடன் பொருத்துக.

| தொகுதி– I | தொகுதி – II |
|---|---|
| (a)  | (i) ஹெல்-வோல் ஹார்ட் - ஜெலின்ஸ்கி வினை |
| (b) $R-\overset{O}{\overset{\parallel}{C}}-CH_3 + NaOX \longrightarrow$ | (ii) கட்டர்மேன் - கோச் வினை |
| (c) $R-CH_2-OH + R'COOH \xrightarrow{\text{அடர் } H_2SO_4}$ | (iii) ஹேலோபார்ம் வினை |
| (d) $R-CH_2COOH \xrightarrow[\text{(ii) } H_2O]{\text{(i) } X_2/\text{சிவப்பு P}}$ | (iv) எஸ்டர் ஆக்கம் |

கீழே கொடுக்கப்பட்ட வாய்ப்புகளில் சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) (a) – (ii), (b) – (iii), (c) – (iv), (d) – (i)
(2) (a) – (iv), (b) – (i), (c) – (ii), (d) – (iii)
(3) (a) – (iii), (b) – (ii), (c) – (i), (d) – (iv)
(4) (a) – (i), (b) – (iv), (c) – (iii), (d) – (ii)
Answer (1)

## BOTANY
## SECTION – A

**100.** Which of the following statements is **not** correct?
(1) Pyramid of numbers in a grassland ecosystem is upright.
(2) Pyramid of biomass in sea is generally inverted.
(3) Pyramid of biomass in sea is generally upright.
(4) Pyramid of energy is always upright.
கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானதல்ல?
(1) ஒரு புல்வெளி சூழல் மண்டலத்தின் எண்ணிக்கை பிரமீடு நேரானது.
(2) கடலின் உயிர் திரள் பிரமீடு பொதுவாக தலைகீழானது.
(3) கடலின் உயிர் திரள் பிரமீடு பொதுவாக நேரானது.
(4) ஆற்றல் பிரமீடு எப்போதும் நேரானது.
Answer (3)

**101.** Which of the following plants is monoecious?
(1) *Cycas circinalis*
(2) *Carica papaya*
(3) Chara
(4) *Marchantia polymorpha*
கீழ்கண்டவற்றுள் இருபால் வகைத் தாவரம் எது?
(1) சைகஸ் சர்சினாலிஸ்
(2) காரிகா பப்பாயா
(3) காரா
(4) மார்கான்ஷியா பாலிமார்ஃபா
Answer (3)

**102.** The first stable product of $CO_2$ fixation in sorghum is
(1) Phosphoglyceric acid
(2) Pyruvic acid
(3) Oxaloacetic acid
(4) Succinic acid
சொர்கம் தாவரத்தில் $CO_2$ நிலைநிறுத்தலின் போது முதலில் உருவாகும் நிலைத்தப் பொருள்:
(1) பாஸ்போகிளிசரிக் அமிலம்
(2) பைரூவிக் அமிலம்
(3) ஆக்சாலோ அசிட்டிக் அமிலம்
(4) சக்சீனிக் அமிலம்
Answer (3)

**103.** Diadelphous stamens are found in

(1) China rose and citrus (2) China rose
(3) Citrus (4) Pea

மகரந்தத்தாள்கள் இரு கற்றைகளாகக் காணப்படுவது:

(1) செம்பருத்தி மற்றும் எலுமிச்சை (2) செம்பருத்தி
(3) எலுமிச்சை (4) பட்டாணி

Answer (4)

**104.** DNA strands on a gel stained with ethidium bromide when viewed under UV radiation, appear as

(1) Bright blue bands (2) Yellow bands
(3) Bright orange bands (4) Dark red bands

ஒரு இழும மின்னாற்பிரித்தலில், எத்திடியம் புரோமைடு மூலம் சாயமேற்றப்பட்ட டி.என்.ஏ. பட்டைகள், புற ஊதாக் கதிர் மூலம் ஒளியூட்டும் போது இவ்வாறு புலனாகின்றன:

(1) மிளிர் நீலப் பட்டைகள் (2) மஞ்சள் பட்டைகள்
(3) மிளிர் ஆரஞ்சு பட்டைகள் (4) அடர் சிவப்புப் பட்டைகள்

Answer (3)

**105.** Plants follow different pathways in response to environment or phases of life to form different kinds of structures. This ability is called

(1) Maturity (2) Elasticity
(3) Flexibility (4) Plasticity

தாவரங்கள் சுற்றுச்சூழல் அல்லது வாழ்க்கை முறையினைப் பொறுத்து பல வழிப் பாதைகளைத் தொடர்ந்து வேறுபட்ட அமைப்புகளை தோற்றுவிக்கின்றன. இத்தன்மை இவ்வாறு அழைக்கப்படுகிறது:

(1) முதிர்ச்சி (2) மீள் தன்மை
(3) வளையும் தன்மை (4) நெகிழ் தன்மை

Answer (4)

**106.** Match List – I with List – II

| List – I | List – II |
|---|---|
| (a) Protoplast fusion | (i) Totipotency |
| (b) Plant tissue culture | (ii) Pomato |
| (c) Meristem culture | (iii) Somaclones |
| (d) Micropropagation | (iv) Virus free plants |

Choose the correct answer from the options given below:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |

| | | | | |
|---|---|---|---|---|
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (iii) | (iv) | (i) | (ii) |

பட்டியல் – I ஐ பட்டியல் – II உடன் பொருத்துக.

| பட்டியல் – I | பட்டியல் – II |
|---|---|
| (a) புரோட்டோபிளாச இணைவு | (i) முழு உருவாக்கம் |
| (b) தாவரத் திசு வளர்ப்பு | (ii) போமேட்டோ |
| (c) ஆக்கத் திசு வளர்ப்பு | (iii) சோமோகுளோன்கள் |
| (d) நுண் பெருக்கம் | (iv) வைரஸ் நீங்கிய தாவரங்கள் |

கீழ்கண்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (iii) | (iv) | (i) | (ii) |

Answer (3)

**107.** In the equation GPP – R = NPP
R represents:

(1) Respiration losses
(2) Radiant energy
(3) Retardation factor
(4) Environmental factor

GPP – R = NPP என்ற சமன்பாட்டில் R என்பது:

(1) சுவாசித்தலின் இழப்புகள்
(2) கதிரியக்க ஆற்றல்
(3) பின்னடைவுக் காரணி
(4) சுற்றுச்சூழல் காரணி

Answer (1)

**108.** The production of gametes by the parents, formation of zygotes, the $F_1$ and $F_2$ plants, can be understood from a diagram called:

(1) Net square
(2) Bullet square
(3) Punch square
(4) Punnett square

பெற்றோர்களின் இனச் செல்கள் உருவாக்கம், சைகோட்டுகள் உருவாக்கம், $F_1$ மற்றும் $F_2$ தாவரங்கள் ஆகியவற்றை புரிந்து கொள்ள உதவும் வரைபடம்:

(1) வலைச் சதுரம்
(2) புல்லட் சதுரம்
(3) பஞ்ச் சதுரம்
(4) புன்னட் சதுரம்

Answer (4)

**109.** Which of the following is an incorrect statement?

(1) Nuclear pores act as passages for proteins and RNA molecules in both directions between nucleus and cytoplasm

(2) Mature sieve tube elements possess a conspicuous nucleus and usual cytoplasmic organelles

(3) Microbodies are present both in plant and animal cells

(4) The perinuclear space forms a barrier between the materials present inside the nucleus and that of the cytoplasm

கீழ்கண்ட கூற்றுகளில் சரியற்றது எது?

(1) உட்கரு மற்றும் சைட்டோபிளாசம் இடையே புரதங்கள் மற்றும் RNA மூலக்கூறுகள் கடப்பதற்கான இரு வழிப் பாதைகளாக உட்கருத் துளைகள் செயல்படுகின்றன.

(2) முதிர்ந்த சல்லடைக்குழாய் கூறுகள், ஒரு தெளிவான உட்கரு மற்றும் பொதுவான சைட்டோபிளாச உறுப்புகளைக் கொண்டுள்ளன.

(3) நுண் உடலகங்கள் தாவர மற்றும் விலங்கு செல்களில் காணப்படுகின்றன.

(4) உட்கரு மற்றும் சைட்டோபிளாசம் ஆகியவற்றுள் காணப்படும் பொருட்களின் இடையே தடையாக, உட்கரு சுற்றியமைந்த இடைவெளி உள்ளது.

Answer (2)

**110.** Match List – I with List – II

| List – I | List – II |
|---|---|
| (a) Lenticels | (i) Phellogen |
| (b) Cork cambium | (ii) Suberin deposition |
| (c) Secondary cortex | (iii) Exchange of gases |
| (d) Cork | (iv) Phelloderm |

Choose the correct answer from the options given below:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (ii) | (i) | (iii) |
| (2) | (iv) | (i) | (iii) | (ii) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |

பட்டியல் – I ஐ பட்டியல் – II உடன் பொருத்துக.

| **பட்டியல் – I** | **பட்டியல் – II** |
|---|---|
| (a) பட்டைத்துளை | (i) ஃபெல்லோஜென் |
| (b) கார்க் கேம்பியம் | (ii) சுபரின் படிதல் |
| (c) இரண்டாம் நிலை புறணி | (iii) வாயுக்களின் பரிமாற்றம் |
| (d) கார்க் | (iv) ஃபெல்லோடெர்ம் |

கீழ்கண்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(a) (b) (c) (d)

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (ii) | (i) | (iii) |
| (2) | (iv) | (i) | (iii) | (ii) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |

Answer (3)

**111.** The amount of nutrients, such as carbon, nitrogen, phosphorus and calcium present in the soil at any given time, is referred as:

(1) Standing crop (2) Climax

(3) Climax community (4) Standing state

கார்பன், நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் கால்சியம் போன்ற ஊட்டச் சத்துக்கள் குறிப்பிட்ட எந்தக் காலத்திலும் மண்ணில் காணப்படுவதன் அளவு இவ்வாறாகக் குறிப்பிடப்படுகிறது:

(1) நிற்கும் பயிர் (2) உச்சம்

(3) உச்ச குழுமம் (4) நிலைத்திருப்பு நிலை

Answer (4)

**112.** The term used for transfer of pollen grains from anthers of one plant to stigma of a different plant which, during pollination, brings genetically different types of pollen grains to stigma, is:

(1) Cleistogamy (2) Xenogamy

(3) Geitonogamy (4) Chasmogamy

மகரந்தச் சேர்க்கையின் போது மரபணுசார் வேறுபாடுடைய மகரந்தத் துகள்களை, சூல்முடிக்கு கொண்டு செல்லும் விதமாக, ஒரு தாவரத்தின் மகரந்தப் பையிலிருந்து மகரந்தத் துகள்கள், வேறொரு தாவரத்தின் சூல்முடிக்கு மாற்றப்படும் மகரந்தச் சேர்க்கை நிகழ்விற்கு பயன்படுத்தப்படும் பதம் எது?

(1) மூடிய மலர் மகரந்தச் சேர்க்கை (2) வெளி மகரந்தச் சேர்க்கை

(3) கேய்ட்டினோகேமி (4) திறந்தமலர் மகரந்தச் சேர்க்கை

Answer (2)

**113.** Which of the following stages of meiosis involves division of centromere?

(1) Telophase – II (2) Metaphase – I

(3) Metaphase – II (4) Anaphase – II

கீழ்கண்ட குன்றல் பகுப்பு நிலையில் சென்ட்ரோமியர் பிரிதல் எந்நிலையில் நடைபெறுகிறது?

(1) டீலோஃபேஸ் – II (2) மெட்டாஃபேஸ் - I

(3) மெட்டாஃபேஸ் – II (4) அனாஃபேஸ் – II

Answer (4)

**114.** Which of the following is a correct sequence of steps in a PCR (Polymerase Chain Reaction)?
(1) Annealing, Denaturation, Extension
(2) Denaturation, Annealing, Extension
(3) Denaturation, Extension, Annealing
(4) Extension, Denaturation, Annealing
கீழ்கண்டவற்றுள் PCR -ல் (பாலிமரேஸ் சங்கிலித் தொடர் வினை) சரியான வரிசைத் தொடர் படிநிலைகள் எது?
(1) பதப்படுத்துதல், இயல்பிழத்தல், நீட்சி
(2) இயல்பிழத்தல், பதப்படுத்துதல், நீட்சி
(3) இயல்பிழத்தல், நீட்சி, பதப்படுத்துதல்
(4) நீட்சி, இயல்பிழத்தல், பதப்படுத்துதல்
Answer (2)

**115.** When gene targeting involving gene amplification is attempted in an individual's tissue to treat disease, it is known as:
(1) Safety testing (2) Biopiracy
(3) Gene therapy (4) Molecular diagnosis
ஒரு தனியரின் திசுவில் நோய் சிகிச்சைக்கு ஜீன் பெருக்கம் மூலம் ஜீன் குறிவைத்தல் நிகழ்த்தப்படுவது இவ்வாறாக அழைக்கப்படுகிறது:
(1) பாதுகாப்பு சோதனை (2) உயிர்த்திருட்டு
(3) ஜீன் சிகிச்சை (4) மூலக்கூறு நோயறிதல்
Answer (3)

**116.** Match List – I with List – II

| List – I | List – II |
|---|---|
| (a) Cristae | (i) Primary constriction in chromosome |
| (b) Thylakoids | (ii) Disc-shaped sacs in Golgi apparatus |
| (c) Centromere | (iii) Infoldings in mitochondria |
| (d) Cisternae | (iv) Flattened membranous sacs in stroma of plastids |

Choose the correct answer from the options given below:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (iv) | (iii) | (ii) | (i) |
| (3) | (i) | (iv) | (iii) | (ii) |
| (4) | (iii) | (iv) | (i) | (ii) |

பட்டியல் – I ஐ பட்டியல் – II உடன் பொருத்துக.

| பட்டியல் – I | பட்டியல் – II |
|---|---|
| (a) கிறிஸ்டே | (i) குரோமோசோம்களின் முதல் நிலை இறுக்கப் பகுதி |
| (b) தைலக்காய்டுகள் | (ii) கோல்கை உறுப்புகளில் உள்ள வட்டு வடிவப் பைகள் |
| (c) சென்ட்ரோமியர் | (iii) மைட்டோ-காண்ட்ரியாக்களில் காணப்படும் உள்மடிப்புகள் |
| (d) சிஸ்டர்னே | (iv) பிளாஸ்டிடுகளில் உள்ள ஸ்ட்ரோமாக்களில் காணப்படும் சவ்வாலான தட்டையான பைகள் |

கீழ்கண்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (iv) | (iii) | (ii) | (i) |
| (3) | (i) | (iv) | (iii) | (ii) |
| (4) | (iii) | (iv) | (i) | (ii) |

Answer (4)

**117.** The factor that leads to Founder effect in a population is:

(1) Genetic drift (2) Natural selection
(3) Genetic recombination (4) Mutation

ஓர் இனக் கூட்டத்தில் நிறுவனர் விளைவு தோன்றுவதன் காரணி எது?

(1) மரபு விலகல் (2) இயற்கை வழித் தேர்வு
(3) மரபு மறுஇணைவு (4) சடுதி மாற்றம்

Answer (1)

**118.** When the centromere is situated in the middle of two equal arms of chromosomes, the chromosome is referred as:

(1) Acrocentric (2) Metacentric
(3) Telocentric (4) Sub-metacentric

குரோமோசோம்களின் இரு சமமான நீளமுடைய கரங்களுக்கு நடுவில் சென்ட்ரோமியர் அமைந்து காணப்படும்போது அக்குரோமோசோம் இவ்வாறு அழைக்கப்படுகிறது:

(1) ஆக்ரோசென்ட்ரிக் (2) மெட்டா சென்ட்ரிக்
(3) டீலோ சென்ட்ரிக் (4) சப்-மெட்டா சென்ட்ரிக்

Answer (2)

**119.** Gemmae are present in

(1) Some Liverworts (2) Mosses
(3) Pteridophytes (4) Some Gymnosperms

ஜெம்மாக்கள் இவற்றில் காணப்படுகின்றன:

(1) சில லிவர்வார்ட்டுகள் (2) மாஸ்கள்
(3) டெரிடோபைட்டுகள் (4) சில ஜிம்னோஸ்பெர்ம்கள்

Answer (1)

**120.** During the purification process for recombinant DNA technology, addition of chilled ethanol precipitates out:

(1) Polysaccharides (2) RNA
(3) DNA (4) Histones

மறுகூட்டிணைவு DNA தொழிற்நுட்பத்தில் தனியே பிரித்தெடுத்தலின் போது, குளிர்ந்த எத்தனால் சேர்க்கப்படுவதன் மூலம் வீழ்படிவாவது:

(1) பாலி சாக்கரைடுகள் (2) RNA
(3) DNA (4) ஹிஸ்டோன்கள்

Answer (3)

**121.** Match List – I with List – II

| List – I | List – II |
|---|---|
| (a) Cohesion | (i) More attraction in liquid phase |
| (b) Adhesion | (ii) Mutual attraction among water molecules |
| (c) Surface tension | (iii) Water loss in liquid phase |
| (d) Guttation | (iv) Attraction towards polar surfaces |

Choose the correct answer from the options given below:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (i) | (iv) | (ii) |

பட்டியல் – I ஐ பட்டியல் – II உடன் பொருத்துக.

| **பட்டியல் – I** | **பட்டியல் – II** |
|---|---|
| (a) வேறின விசை | (i) திரவ நிலையில் அதிக ஈர்ப்பு |
| (b) ஓரின விசை | (ii) நீர் மூலக்கூறுகளுக்கிடையேயான பரஸ்பர ஈர்ப்பு |
| (c) பரப்பு இழுவிசை | (iii) திரவ நிலையில் நீர் இழப்பு |
| (d) நீர் வடிதல் | (iv) துருவப் பரப்புகளை நோக்கிய ஈர்த்தல் |

கீழ்கண்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |

(3) (iv) (iii) (ii) (i)
(4) (iii) (i) (iv) (ii)
Answer (2)

**122.** The site of perception of light in plants during photoperiodism is
(1) Leaf (2) Shoot apex
(3) Stem (4) Axillary bud
ஒளிக் காலத்துவத்தின் போது தாவரங்கள் ஒளியை உணரும் பகுதி:
(1) இலை (2) தண்டின் நுனி
(3) தண்டு (4) இலைக்கோண மொட்டு
Answer (1)

**123.** The plant hormone used to destroy weeds in a field
(1) IBA (2) IAA (3) NAA (4) 2, 4-D
களைக் கொல்லியாக வயலில் பயன்படுத்தப்படும் தாவர வளர்ச்சி ஊக்கி:
(1) IBA (2) IAA (3) NAA (4) 2, 4-D
Answer (4)

**124.** Which of the following algae produce Carrageen?
(1) Blue-green algae (2) Green algae
(3) Brown algae (4) Red algae
கீழ்கண்ட பாசிகளில் காராஜீன் உற்பத்தி செய்பவை எவை?
(1) நீலப் – பசும் பாசிகள் (2) பசும் பாசிகள்
(3) பழுப்புப் பாசிகள் (4) சிவப்புப் பாசிகள்
Answer (4)

**125.** Complete the flow chart on central dogma.
(a) DNA $\xrightarrow{(b)}$ mRNA $\xrightarrow{(c)}$ (d)
(1) (a) – Transduction; (b) – Translation; (c) – Replication; (d) – Protein
(2) (a) – Replication; (b) – Transcription; (c) – Transduction; (d) – Protein
(3) (a) – Translation; (b) – Replication; (c) – Transcription; (d) – Transduction
(4) (a) – Replication; (b) – Transcription; (c) – Translation; (d) – Protein
மையக் கோட்பாட்டின் தொடர் வரைபடத்தை முழுமையாக்கவும்:
(1) (a) – கடத்தல்; (b) – மொழிபெயர்த்தல்; (c) – இரட்டிப்பாதல்; (d) – புரதம்
(2) (a) – இரட்டிப்பாதல்; (b) – படியெடுத்தல்; (c) – கடத்தல்; (d) – புரதம்
(3) (a) – மொழிபெயர்த்தல்; (b) – இரட்டிப்பாதல்; (c) – படியெடுத்தல்; (d) – கடத்தல்
(4) (a) – இரட்டிப்பாதல்; (b) – படியெடுத்தல்; (c) – மொழிபெயர்த்தல்; (d) – புரதம்
Answer (4)

**126.** Which of the following are not secondary metabolites in plants?

(1) Rubber, gums (2) Morphine, codeine
(3) Amino acids, glucose (4) Vinblastin, curcumin

கீழ்கண்டவற்றுள் எவை தாவரங்களில் இரண்டாம் நிலை வளர்சிதை மாற்றப் பொருட்கள் அல்ல?

(1) இரப்பர், கோந்து (2) மார்ஃபின், கோடீன்
(3) அமினோஅமிலங்கள், குளுகோஸ் (4) வின்பிளாஸ்டின், கர்குமின்

Answer (3)

**127.** Inspite of interspecific competition in nature, which mechanism the competing species might have evolved for their survival?

(1) Predation (2) Resource partitioning
(3) Competitive release (4) Mutualism

இயற்கையில், சிற்றினங்களுக்கிடையேயான போட்டியாயினும், உயிர் பிழைத்தல் பொருட்டு போட்டி சிற்றினங்கள் பெறக் கொண்ட வழிமுறை:

(1) கொன்றுண்ணுதல் (2) ஆதாரப் பகிர்வு
(3) போட்டி விடுவிப்பு (4) பகிர்ந்து வாழ்தல்

Answer (2)

**128.** Which of the following is not an application of PCR (Polymerase Chain Reaction)?

(1) Detection of gene mutation
(2) Molecular diagnosis
(3) Gene amplification
(4) Purification of isolated protein

கீழ்கண்டவற்றுள் PCR (பாலிமரேஸ் சங்கிலித் தொடர் வினை) – ன் பயன்பாடு எதுவல்ல?

(1) ஜீன் சடுதிமாற்றத்தைக் கண்டறிதல்
(2) மூலக்கூறு நோயறிதல்
(3) ஜீன் பெருக்கம்
(4) பிரித்தெடுக்கப்பட்ட புரதத்தை தூய்மையாக்கல்

Answer (4)

**129.** Match List – I with List – II

| List – I | List – II |
|---|---|
| (a) Cells with active cell divison capacity | (i) Vascular tissues |
| (b) Tissue having all cells similar in Structure and function | (ii) Meristematic tissue |
| (c) Tissue having different types of cells | (iii) Sclereids |
| (d) Dead cells with highly thickened | |

walls and narrow lumen. (iv) Simple tissue

Select the correct answer from the option given below:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (ii) | (iv) | (i) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (i) | (ii) | (iii) | (iv) |

பட்டியல் – I ஐ பட்டியல் – II உடன் பொருத்துக.

| **பட்டியல் – I** | **பட்டியல் – II** |
|---|---|
| (a) செயல் மிகு செல் பகுப்பு ஆற்றல் கொண்ட செல்கள் | (i) வாஸ்குலார் திசுக்கள் |
| (b) அமைப்பு மற்றும் செயலில் ஒத்த செல்களையுடைய திசுக்கள் | (ii) ஆக்கத் திசு |
| (c) பல வகையான செல்களை உடைய திசுக்கள் | (iii) ஸ்கிலீரிடுகள் |
| (d) மிகத் தடித்த சுவர் மற்றும் குறுகிய லூமன் கொண்ட இறந்த செல்கள் | (iv) எளிய திசுக்கள் |

கீழ்கண்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (ii) | (iv) | (i) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (i) | (ii) | (iii) | (iv) |

Answer (2)

**130.** A typical angiosperm embryo sac at maturity is:

(1) 8-nucleate and 8-celled (2) 8-nucleate and 7-celled

(3) 7-nucleate and 8-celled (4) 7-nucleate and 7-celled

ஒரு ஆஞ்சியோஸ்பெர்ம் தாவரத்தின் முதிர்ந்த கருப்பை இவ்வாறு அமைந்துள்ளது:

(1) 8-நியூக்ளியஸ் மற்றும் 8-செல்கள் (2) 8-நியூக்ளியஸ் மற்றும் 7-செல்கள்

(3) 7-நியூக்ளியஸ் மற்றும் 8-செல்கள் (4) 7-நியூக்ளியஸ் மற்றும் 7-செல்கள்

Answer (2)

**131.** Which of the following algae contains mannitol as reserve food material?

(1) Ulothrix (2) Ectocarpus

(3) Gracilaria (4) Volvox

கீழ்கண்ட பாசிகளில் எதில் மான்னிடால் சேமிப்பு உணவுப் பொருளாக உள்ளது?

(1) உலோத்ரிக்ஸ் (2) எக்டோகார்பஸ்

(3) கிராசிலேரியா (4) வால்வாக்ஸ்

Answer (2)

**132.** Genera like Selaginella and salvinia produce two kinds of spores. Such plants are known as:

(1) Heterosporous (2) Homosorus

(3) Heterosorus (4) Homosporous

செலாஜினெல்லா மற்றும் சால்வீனியா போன்ற பேரினங்கள் இரு வகையான ஸ்போர்களை உருவாக்குகின்றன. அவ்வகைத் தாவரங்கள் இவ்வாறு அறியப்படுகின்றன:

(1) ஹெடிரோஸ்போரஸ் (2) ஹோமோசோரஸ்

(3) ஹெடிரோசோரஸ் (4) ஹோமோஸ்போரஸ்

Answer (1)

**133.** Mutations in plant cells can be induced by:

(1) Zeatin (2) Kinetin

(3) Infrared rays (4) Gamma rays

தாவர செல்களில் இதன் மூலம் சடுதி மாற்றம் தூண்டப்படுகிறது:

(1) சீயாடின் (2) கைனடின்

(3) அகச் சிவப்புக் கதிர்கள் (4) காமா கதிர்கள்

Answer (4)

**134.** Amensalism can be represented as:

(1) Species A (+); Species B (0)

(2) Species A (-); Species B (0)

(3) Species A (+); Species B (+)

(4) Species A (-); Species B (-)

அமென்சாலிசம் என்பதை இவ்வாறு குறிப்பிடலாம்:

(1) சிற்றினம் A (+); சிற்றினம் B (0)

(2) சிற்றினம் A (-); சிற்றினம் B (0)

(3) சிற்றினம் A (+); சிற்றினம் B (+)

(4) சிற்றினம் A (-); சிற்றினம் B (-)

Answer (2)

## SECTION – B

**135.** What is the role of RNA polymerase III in the process of transcription in eukaryotes?
(1) Transcribes only snRNAs
(2) Transcribes rRNAs (28S, 18S and 5.8S)
(3) Transcribes tRNA, 5s rRNA and snRNA
(4) Transcribes precursor of mRNA
யூகேரியோட்டுகளில் (மெய்யுட்கரு உயிரினங்கள்) படியெடுத்தல் நிகழ்வின் போது RNA பாலிமரேஸ் III-ன் பங்கு என்ன?
(1) snRNA க்களை மட்டும் படியெடுக்கிறது
(2) rRNA க்களை (28S, 18S and 5.8S) படியெடுத்தல்
(3) tRNA, 5s rRNA மற்றும் snRNA க்களை படியெடுத்தல்
(4) mRNA வின் முன்பொருளை படியெடுக்கிறது
Answer (3)

**136.** Select the correct pair:
(1) Loose parenchyma cells rupturing the epidermis and forming a lens shaped opening in bank - Spongy parenchyma
(2) Large colorless empty cells in the Epidermis of grass leaves Structure and function - Subsidiary cells
(3) In dicot leaves, vascular bundless are surrounded by large thick-walled cells - Conjunctive tissue
(4) Cells of medullary rays that form part of Cambial ring - Interfascicular cambium
சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்:
(1) நெருக்கமற்ற பாரன்கைமா செல்கள், புறத்தோலை துளைத்து பட்டையில் உருவாக்கும் வில்லை போன்ற திறப்பு - பஞ்சு பாரன்கைமா
(2) புற்களின் இலைகளில் காணப்படும் பெரிய நிறமற்ற வெற்று புறத்தோல் செல்கள் - துணை செல்கள்
(3) இருவித்திலைத் தாவர இலைகளில் வாஸ்குலார் கற்றைகள் பெரிய தடித்த சுவர் கொண்ட செல்களால் சூழப்பட்டுள்ளது - இணைப்புத் திசு
(4) கேம்பிய வளையத்தின் பகுதியாக உருவாகும் மெடுல்லரி கதிர்களின் செல்கள் - கற்றையிடைக் கேம்பியம்
Answer (4)

**137.** Plasmid pBR322 has PstI restriction enzyme site within gene *amp*$^R$ that confers ampicillin resistance. If this enzyme is used for inserting a gene for β-galactoside production and the recombinant plasmid is inserted in an *E.coli* strain

(1) It will be able to produce a novel protein with dual ability
(2) It will not be able to confer ampicillin resistance to the host cell
(3) The transformed cells will have the ability to resist ampicillin as well as produce β-galactoside
(4) It will lead to lysis of host cells

ஆம்பிசில்லின் எதிர்ப்பினை அளிக்கும் *amp*$^R$ ஜீனினுள் PstI வரையறுக்கப்பட்ட நொதிக் களத்தை pBR322 பிளாஸ்மிடு கொண்டுள்ளது. β-காலக்டோசைட் உற்பத்திக்கான ஒரு ஜீனை புகுத்துவதற்கு இந்த நொதியை பயன்படுத்தி மறுசேர்க்கை பிளாஸ்மிடு ஒரு *எ.கோலை* யில் புகுத்தப்பட்டால்:

(1) அது இருசெயலாற்றல் கொண்ட ஒரு புதுமையான புரதத்தை உற்பத்தி செய்யும்.
(2) ஓம்புயிரி செல்லிற்கு ஆம்பிசில்லின் எதிர்ப்பினை அளிக்க இயலாது.
(3) மாற்றம் பெற்ற செல்கள் ஆம்பிசில்லின் எதிர்ப்பையும் பெற்று β-காலக்டோசைட் உற்பத்தியும் செய்யும்.
(4) அது ஓம்புயிரி செல்லின் அழிவை ஏற்படுத்தும்.

Answer (2)

**138.** DNA fingerprinting involves identifying differences in some specific regions in DNA sequence, called as

(1) Polymorphic DNA
(2) Satellite DNA
(3) Repetitive DNA
(4) Single nucleotides

DNA தடய அறிவியல் என்பது DNA வரிசைத் தொடரில் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள வேறுபாடுகளை கண்டறிவதாகும். அப்பகுதிகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன:

(1) பாலிமார்பிக் DNA
(2) சாட்டிலைட் DNA
(3) மீள்தொடர் DNA
(4) ஒற்றை நியூக்ளியோடைடுகள்

Answer (3)

**139.** In the exponential growth equation $N_t = N_0e^{rt}$, e represents

(1) The base of geometric logarithms
(2) The base of number logarithms
(3) The base of exponential logarithms
(4) The base of natural logarithms

பல மடிப்பெருக்க $N_t = N_0e^{rt}$, சமன்பாட்டில் e குறிப்பது:

(1) வடிவியல் மடக்கையின் அடிப்படை
(2) எண் மடக்கையின் அடிப்படை
(3) பலமடிப்பெருக்க மடக்கையின் அடிப்படை

(4) இயல்பு மடக்கையின் அடிப்படை

Answer (4)

**140.** Which of the following statments is incorrect?

(1) Cyclic photophosphorylation involves both PS I and PS II

(2) Both ATP and NADPD + $H^+$ aren synthesized during non-cyclic photophosphorylation

(3) Stroma lamellae have PS I only and lack NADP reductase

(4) Grana lamellae have both PS I and PS II

கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானதல்ல?

(1) சுழல் ஒளிப் பாஸ்பாரிகரணத்தில் PS I மற்றும் PS II ஆகிய இரண்டும் ஈடுபடுகின்றன.

(2) சுழலில்லா ஒளிப் பாஸ்பாரிகரணத்தின் போது ATP மற்றும் NADPH + $H^+$ ஆகிய இரண்டும் தயாரிக்கப்படுகிறது.

(3) ஸ்ட்ரோமா லாமெல்லாக்கள் PS I மட்டும் பெற்றுள்ளன. அவற்றில் NADP ரிடக்டேஸ் காணப்படுவதில்லை.

(4) கிரானா லாமெல்லாக்கள் PS I மற்றும் PS II ஆகிய இரண்டையும் கொண்டுள்ளன.

Answer (1)

**141.** Which of the following statements is correct?

(1) Some of the organisms can fix atmospheric nitrogen in specialized cells called sheath cells

(2) Fusion of two cells is called Karyogamy

(3) Fusion of protoplasms between two motile on non-motile gametes is called plasmogamy

(4) Organisms that depend on living plants are called saprophytes

கீழ்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

(1) சில உயிரினங்கள் வளிமண்டல நைட்ரஜனை கற்றை செல்கள் எனும் சிறப்பான செல்களில் நிலை நிறுத்துகின்றன.

(2) இரு செல்களின் இணைவு கேரியோகேமி எனப்படும்.

(3) இரு நகரக்கூடிய அல்லது நகரா இனச் செல்களின் புரோட்டோபிளாசங்களின் இணைவு பிளாஸ்மோகேமி எனப்படும்.

(4) உயிர்வாழ்த் தாவரங்களை சார்ந்துள்ள உயிரினங்கள் சாருண்ணிகள் எனப்படும்.

Answer (3)

**142.** Match Column – I with Column – II

| Column – I | Column – II |
|---|---|
| (a) Nitrococcus | (i) Denitrification |
| (b) Rhizobium | (ii) Conversion of ammonia to nitrite |
| (c) Thiobacillus | (iii) Conversion of nitrite to nitrate |

(d) Nitrobacter (iv) Conversion of atmospheric nitrogen to ammonia.

Choose the correct answer from options given below:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (i) | (ii) | (iii) | (iv) |
| (4) | (iii) | (i) | (iv) | (ii) |

பட்டியல் – I ஐ பட்டியல் – II உடன் பொருத்துக.

| **பட்டியல் – I** | **பட்டியல் – II** |
|---|---|
| (a) நைட்ரோகாக்கஸ் | (i) நைட்ரஜன் நீக்கம் |
| (b) ரைசோபியம் | (ii) அம்மோனியாவை நைட்ரைட்டாக மாற்றுதல் |
| (c) தையோபேசில்லஸ் | (iii) நைட்ரைட்டை நைட்ரேட்டாக மாற்றுதல் |
| (d) நைட்ரோபாக்டர் | (iv) வளிமண்டல நைட்ரஜனை அம்மோனியாவாக மாற்றுதல் |

கீழ்கண்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (i) | (ii) | (iii) | (iv) |
| (4) | (iii) | (i) | (iv) | (ii) |

Answer (2)

**143.** Which of the following statements of incorrect?

(1) Oxidation – reduction reactions produce proton gradient in respiration.

(2) During aerobic respiration, role is oxygen is limited to the terminal state.

(3) In ETC (Electron Transport Chain), one molecule of NADH + $H^+$ gives rise to 2 ATP molecules, and one $FADH_2$ gives rise to 3 ATP molecules

